# சர்வவியாபி

SARVAVIABI

MISSION PRESS 1840

10-09-2017 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | ஹேவிளம்பி வருடம் ஆவணி 25 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 111 | பக்கம் - 12 | இதழ் 35


e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360

ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச்


## நம்பிக்கையற்ற தண்டனைகள், வெறும் சித்திரவதைகளாக மாறிவிடும்



**எ**ந்த ஒரு தண்டனையும், நம்பிக்கை என்ற தொடு வானத்தை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். நம்பிக்கை யற்ற தண்டனைகள், வெறும் சித்திரவதைகளாக மாறிவிடும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அர்ஜென்டினா நாட்டு இளையோருக்கு அனுப்பிய ஒரு காணொளிச் செய்தியில் கூறியுள்ளார். இள வயதில் குற்றங்கள் புரிந்து சிறைவைக்கப் பட்டிருப்போருக்கு, அர்ஜென்டினா நாட்டின் புவெனஸ் அயிரஸ் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள எஸெயிஸா மையம் என்ற சீர்திருத்தப்பள்ளி மாணவர்களுக்கு திருத்தந்தை, கடந்த வியாழன் மாலை காணொளிச் செய்தி யொன்றை அனுப்பி யுள்ளார். இசை உட்பட, பல்வேறு குணமளிக்கும் வழிகளில், இளம் குற்றவாளிகளை சீர்திருத்த முயலும் இந்த மையத்தின் முயற்சிகளை தான் பாராட்டுவதாக, திருத்தந்தை, இஸ்பானிய மொழியில் வழங்கியுள்ள இச்செய்தியில் கூறியுள்ளார். இப்பள்ளியில் மேற்கொள்ளப்படும் கல்வி வழியே, இளையோர் மீண்டும் சமுதாயத்தில் தங்கள் வாழ்வைத் தொடர முடியும் என்ற நம்பிக்கையை இந்த மையம் வழங்குவதோடு, இசை போன்ற கலைவடிவங்கள் வழியே, இளையோரின் மனங்களை மேன்மைப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கு திருத்தந்தை தன் பாராட்டுக்களைக் கூறியுள்ளார். சீர்திருத்தப் பள்ளியிலிருந்து வெளியேறும் இளையோர், மீண்டும் பிரச்சனைகளை சந்திப்பதுநிச்சயம் என்றாலும், அவர்கள் உள்ளத்தில் விதைக்கப்பட்டுள்ள நம்பிக்கை, பிரச்சனைகளை எதிர்கொள்ள சக்தி தரும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்தக் காணொளிச் செய்தியில் கூறியுள்ளார். பள்ளியில் பயிலும் இளையோர் அனைவரையும், தன் உள்ளத்திற்கு நெருக்கமாக வைத்து, அவர்களுக்காக செபிப்பதாகச் கூறியுள்ள திருத்தந்தை, அவர்களை மீண்டும் சந்திக்கும்வரை, புன்முறுவலோடு அவர்களைக் காண விழைவதாகக் கூறி, தன் காணொளிச் செய்தியை நிறைவு செய்துள்ளார்.

## முடிசூட்டிய அரசி நம்முடன் இணைந்து நடந்து வருகிறார்

**போ**லந்தின் செஸ்டகோவா மரியன்னை திருவிழாவை முன்னிட்டு, அத்திருத்தலத்தில் கூடியிருக்கும் திருப்பயணிகள் அனைவருக்கும் தன் வாழ்த்துக்களை வெளியிட்டு, செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். இவ்வாண்டு, டெஸ்டகோவா மரியன்னை திருவிழா வுடன் இணைந்து, செஸ்டகோவாவின் யஸ்ன கோரா மரியன்னை திரு உருவத்திற்கு, திருத்தந்தையின் அங்கீகாரத்துடன் மணிமகுடம் சூட்டப்பட்டதன் 300ம் ஆண்டும் சிறப்பிக்கப்படுவதை தன் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், போலந்தின் இதயமாக செஸ்டகோவா இருப்பது என்பது, போலந்து நாடு ஒரு தாய்மைக்குரிய இதயத்தைக் கொண்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டுவதாக உள்ளது என தெரிவித்துள்ளார். போலந்து நாடு திருமுழுக்குப் பெற்றதன் 1050ம் ஆண்டுக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள, தான் அங்கு வந்ததை இன்றும் பசுமையுடன் நினைவுகூர்வதாக தன் செய்தியில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, முடிசூட்டப்பட்ட அரசியாகிய யஸ்ன கோரா அன்னை மரியா, தூரத்தில் வாழும் ஓர் அரசி அல்ல, மாறாக மக்களோடு உடன் நடந்து வழி நடத்தும் ஒரு தாய் என மேலும் அதில் கூறியுள்ளார். யஸ்ன கோரா அன்னை முடிசூட்டப்பட்டதன் 300 ம் ஆண்டை சிறப்பிக்கும் இவ்வேளையில், நாம் அனைவரும் அன்னையின் பாதுகாப்பை உணர்ந்து, நாம் எவரும் அனாதைகள் அல்ல என்பதை காட்ட வேண்டும் எனவும், போலந்து மக்களுக்கான திருத்தந்தையின் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## அன்பு மற்றும் வாழ்வுக் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் திருத்தலம்.



**அ**ன்னை தெரேசா இறையடி சேர்ந்ததன் 20ம் ஆண்டு, மற்றும் புனிதராக அறிவிக்கப்பட்டதன் முதலாம் ஆண்டு ஆகியவற்றை நினைவுகூரும் விதமாக, கடந்த செவ்வாய்க்கிழமையன்று, கோசொவோ நாட்டில் உள்ள பிரிஸ்டினா நகரில், புனித அன்னை தெரேசா திருத்தலம் திருநிலைப் படுத்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அன்னை தெரேசாவின் பிறந்த நாளான ஆகஸ்ட் 26ம் தேதி அல்பேனிய மக்களால் துவக்கப்பட்ட இரு வாரக் கொண்டாட் டங்களின் ஒரு பகுதியாக இடம்பெற்ற இந்த கோவில் திருநிலைப்பாட்டுக் கொண்டாட்டத்தின், திருத்தந்தையின் பிரதிநிதியாக கர்தினால் எர்னஸ்ட் சிமோனி அவர்கள் கலந்துகொண்டார். கோசொவோ பகுதியின் முதல் மறைசாட்சிகளான இரண்டாம் நூற்றாண்டு இரட்டை சகோதரர்கள், ஃபுளோரஸ் மற்றும் லௌரஸ் ஆகியோரின் மறைசாட்சிய இடத்தருகே முன்னாள் அரசுத் தலைவர் Ibrahim Rugova அவர்களால் வழங்கப்பட்ட நிலத்தில், 2005 ம் ஆண்டு ஆகஸ்ட் 26ம் தேதியே, அப்போதைய ஆயர் Mark Sopi அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளபோதிலும், 2006ம் ஆண்டு ஜனவரி மாதம், அரசுத் தலைவரும் ஆயரும் அடுத்தடுத்து மரணமடைய, கட்டுமானப் பணிகள் காலதாமதத்தை எதிர்கொண்டன. அன்னை தெரேசாவின் பெயரால் இச்செவ்வாய்க் கிழமையன்று திறக்கப் பட்டுள்ள இத்திருத்தலத்தின் கட்டுமானப்பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோதே, 2010ம் ஆண்டு, அன்னை தெரேசாவின் நூறாமாண்டு பிறப்புக் கொண்டாட்டம், இக்கோவிலினுள் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. இத்திருத்தலம் பற்றிக் குறிப்பிட்ட பிரிஸ்டினா மறைமாவட்ட முதன்மைக் குரு Lourdes Gjergji அவர்கள், அன்னை தெரேசாவின் எடுத்துக் காட்டின் துணையுடன், அன்பு மற்றும் வாழ்வுக் கலாச்சாரத்தை கற்று நடைமுறைப் படுத்தும் ஆவலை வெளிப்படுத்துவதாக இந்த திருத்தலம் உள்ளது என்றார்.

ஆசிரியர் பேனா...

# வளர் இளம் பருவத்தினரைக் காப்போம்

எதைப்பற்றியும் கவலைப்படாத பருவம் வளர்இளம் பருவம் (TEENAGE - பதின்ம வயதினர்). துடிப்புடனும் பற்பல கனவுகளுடனும், தன் விருப்பத்திற்கேற்ற நட்பு வளையத் துடனும் வலம் வரும் இல்லத்தின் பட்டாம்பூச்சிகள் இவர்கள். அதேவேளையில், நடுநிலை முடிவுகளில் வளர்ச்சியும் முதிர்ச்சியும் இல்லாதவர்கள், அந்த பருவத்தில இதை இவர்கள் பயிற்றுவித்துக்கொள்ள வேண்டும். இங்குதான் பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களின் பங்கு மிகுந்த முன்எச்சரிக்கையும் விவேகமும் உள்ளதாக இருக்க வேண்டும். தங்கள் வளம் இளம் பருவ குழந்தைகளை மிகுந்த கவனமுடன் கையாள வேண்டும். அவர்களது கல்வி, அறிவு வளர்ச்சி, ஒழுக்கம், பொறுப்பு, எதிர்காலத்தைப் பற்றிய அக்கறை, மனதளவிலும் உடலள விலும் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவர்களை இனிமையாகவும் இலகுவாகவும் பெற்றோர்கள் வழிநடத்த வேண்டும். இதற்கு தங்களது அனுபவம் மிக்க நண்பர்கள் உறவினர்களின் உதவியை நாடுவதும் மிக நல்லது.

**பள்ளிப் பருவத்தில் பாடித் திரியும்** இந்த பறவைகள், அடுத்தக்கட்ட வாழ்வுக்கு அவர்கள் வழிநடத்தப்பட வேண்டும் இதில் கண்டுகொள்ளாமையும், பொறுப்பற்ற தன்மையும், குழந்தைகளுக்கென்று தினமும் சிறிது நேரம் ஒதுக்க இயலாத சூழலும் இருந்தால், அவர்கள் வெளியிலிருந்தும் வேண்டாதவற்றிலிருந்தும் மனதுக்குள் புகுந்துவிடும்; தீமைகள், எதிர்மறையான சிந்தனைக்கும் செயல்பாடு களுக்கும் வாழ்வுக்கும் வழிவகுத்துவிடும்.

**அண்மையில் உத்தரப்பிரதேச** மாநிலத்தில் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த குழந்தைகள் ஆக்சிஜன் பற்றாக்குறையால் இருநூறுக்கும் அதிகமானோர் இறந்தது நம் நாட்டையே அதிர்ச்சி அடையச் செய்தது. இப்பொழுது BLUE WHALE GAME - நீலத் திமிங்கல விளையாட்டு மக்களை குறிப்பாக பெற்றோரை பீதி அடையச் செய்துள் ளது. ரஷ்யாவில் ஒருவர் தொடங்கிய இந்த விபரீத கம்ப்யூட்டர் விளையாட்டு இப்பொழுது கொஞ்சம் கொஞ்ச மாக பயணித்து இந்தியாவுக்குள்ளும் நுழைந்திருக்கிறது. உலக அளவில் நூற்றுக்கும் அதிகமான வளர் இளம் பருவத்தினர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

**இந்த விபரீத விளையாட்டை** Blue whale game என்று அழைக்கக் காரணம்: நீலத்திமிங்கலம் ஒரு சூழலில் அதனுடைய செயலியக்கங்கள் வித்தியாசப் படுவதால், அது கூட்டத்திலிருந்து தனிமை படுத்தப்படுகிறது அல்லது தனிமைப்படுத்திக் கொள்கிறது; பின் தனிமையாகவே இங்குமங்கும் திரிந்து கரையை நோக்கி நகர்ந்து இறந்து போகிறது; தற்கொலை செய்துகொள்கிறது. இந்த கருப்பொருளைக் கொண்டே, சுமார் ஐம்பது நாட்கள் இந்த கம்ப்யூட்டர் விளையாட்டில் ஈடுபடும் வளர் இளம் பருவத் தினரை படிப்படியாக மூளைச் சலவை செய்து, அவர்களை தற்கொலை செய்ய இயக்குகிறார், இந்த விளையாட்டை நிகழ்த்தும் whatsapp (வாட்ஸ் அப்) நிர்வாகி (Admin). எனவே இந்த விளையாட்டை Blue whale game என்று அழைக்கிறார்கள்.




**இதைத் தொடங்கி இயக்கு பவரை** அண்மையில் மிகுந்த சிரமத்தில் ஊடகத்தார் தொடர்பு கொண்டுள்ளனர். அவரைப் பிடித்து ரஷ்ய அரசாங்கமும் விசாரித்திருக் கிறது. உலகிலும் சமுதாயத்திலும் தேவையில்லாதவர்களையும், மக்கள் தொகையையும் குறைப்பதற்காக இந்த விளையாட்டை பரவச் செய்வதாக அவர் கூறியுள்ளார். பிள்ளைகள் இயல்பாகவே கம்ப்யூட்டர் விளையாட்டில் ஆர்வம் காட்டுகிறார்கள். தற்கொலை செய்து கொண்டு இறந்தவர்கள் அனை வருமே வளர்இளம் பருவத்தினர் தான். இன்று இந்தியாவிலே தான் அதிகப்படியான வளர் இளம் பருவத்தினர் உள்ளனர். மக்கள் தொகையில் ஏறக்குறைய 40% ஆகும். இந்த Blue whale game, விரைவாக பல துறைகளில் வளர்ந்து வரும் நம் நாட்டை குறி வைத்தே இயக்கப் படுவதாகத் தெரிகிறது. அடுத்த நான்கு ஐந்து ஆண்டுகளில் துடிப்புடைய இளைஞர்களாக உருவாக இருக்கும் பதின் வயதினரை குறைத்தால், இளைஞர்கள் எண்ணிக்கையும் குறையும், இளைஞர் அதிகம் பணிபுரியும் அனைத்து துறைகளும் நலிவடையும். இறுதியாக பொருளா தாரம் சிதையும்; நாட்டின் முன்னேற்றமும் முன்னேற்ற முயற்சிகளும் பின்னடைவைச் சந்திக்கும்.



**இத்தகைய தீவிரவாத, கொலைபாதக இலக்குடன்** இந்த Blue whale game நம் நாட்டுக்குள் நுழைந்திருக்கிறது. கொல்கத்தாவிலும், சென்னையிலும், மதுரையிலும் ஒரு சில பதின் வயதினர் இந்த விளையாட்டில் ஈடுபட்டு தற்கொலை செய்து கொண்டது நாட்டையே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது. இந்த பயங்கரத்திலிருந்து நம் பிள்ளைகளை நாம் காப்பாற்ற வேண்டும். இதை பரப்பு வோரை கடுமையாக தண்டிக்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் அணுகுமுறைகளில் வித்தியாசம் இருந்தால், குறிப்பாக அவர்கள் தங்களையே தனிமைப் படுத்திக்கொள்ள முயல்கிறார்கள் என்று உணர்ந்தால் அதை சாதுர்யமாக கையாள வேண்டும். அவர்களை தனிமையாக இருக்கவிடலாகாது; அவர்கள் இரவு நேரங்களில் செல்போன், கம்ப்யூட்டர் - வாட்ஸ்அப், ஆன்லைன் கேம் - பயன்படுத்து வதைக் கண்டால், அவர்கள் மனம் புண்படாதவாறு அதனை தவிர்க்க முயல வேண்டும். இது உயிர் பிரச்சினை; வாழ்க்கை பிரச்சினை. பிள்ளைகளின் கவனம் படிப்பிலும், உறவிலும், நட்பிலும் குறையும் போது அவர்கள் தங்களையே தனிமைப் படுத்திக்கொள்ள முயலக்கூடும். எனவே, படிப்பிலும் எதிர்கால வாழ்விலும் அவர்களுக்கு அக்கறையூட்ட வேண்டும். பிள்ளைகள்தான் பெற்றோருக்கும், நாட்டுக்கும் எதிர்காலம். வாழ்வின், சமூகத்தின், மனித மாண்பின் மதிப்பீடுகளையும் மேன்மை யையும் அவர்களுக்கு படிப்படியாக ஊட்ட வேண்டும்.

**அண்மையில் மதுரையில்** ஒரு மாணவர் இந்த விபரீத விளையாட்டில் ஈடுபட்டு தற்கொலை செய்து கொண்டார். முன்னதாக 75 பேருக்கு இதை பகிர்ந்துள்ளார், அவர்கள் அனைவரும் இதை விளையாட தடை செய்துள்ளனர். இதை அறிந்த மதுரை உயர்நீதிமன்ற இரு அமர்வு நீதிபதிகள் இந்த Blue whale game ன் விபரீதத்தைக் கருதி, மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் இந்த விளையாட்டை தடை செய்ய வழிவகைகளை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தி Director IIT Madras அவர்களை கேட்டுக்கொண்டுள்ளது.

**கணவன், மனைவி இருவரும்** பணிக்குச் செல்லும் இக்காலத்தில் அவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர் களுக்கு, குறிப்பாக குழந்தைகளுக்கும், பதின் வயது குழந்தைகளுக்கும் நேரம் ஒதுக்க வேண்டும். தங்களது அபிலாசைகளை அவர்கள்மேல் சுமத்தாமல், அவர்கள் ஆர்வம் கொள்ளும் நல்ல துறைகளில் அவர்கள் பயிலவும், சிறக்கவும் உதவ வேண்டும். இந்த Blue whale game - நீலத் திமிங்கல விளையாட்டு பதின் வயதினரின் வாழ்க்கையுடன் விளையாடிவிடக்கூடாது. வளர் இளம் பருவத்தினரைக் காப்போம். ●

வாரச் சிந்தனை

ஆண்டின் பொதுக்காலம் 24 ஆம் ஞாயிறு (17-09-2017) சீராக்.27:30,28:7 உரோமை.14:7-9 மத்.18:21-35

# மன்னித்து மறக்க வரம் கேட்போம்

நன்றி: மறையுரை முத்துக்கள்

அமெரிக்காவில் ஒரு சிறுவன் வெள்ளை மாளிகை முன் நின்று பார்த்துக் கொண்டிருந்தான். அங்கிருந்த காவலர் அவனிடம் 'என்ன பார்க்கிறாய்?' என்றார். அவனோ வெகுளித் தனமாக, 'இதை நான் வாங்க வேண்டும். இது என்ன விலை இருக்கும்?' என்றான். காவலர் சிரித்தார். பின்னர் கூறினார்: 'இதை உன்னால் வாங்க முடியாது. மேலும் இதை யாரும் விற்பதாகவும் இல்லை. ஏனென்றால் நீ அமெரிக்க குடிமகனாக இருப்பதனால் இது ஏற்கெனவே உன்னுடைய சொத்து. உன் சொத்தை நீயே வாங்க முடியுமா?' என்றார். சிறுவன் புரிந்துகொண்டு புன்சிரிப்புடன் சென்றான்.

**மன்னிக்கப்பட்டுள்ளோம் எனவே மன்னிப்போம்:** இதே போல்தான் கிறிஸ்தவர்களாகிய நமக்கு சொத்து என்று ஒன்று உள்ளது. உலகத்திற்கே அது தெரியும். கிறிஸ்தவராய் இருந்தால் அவர் அந்த சொத்தைக் கொண்டவராய்தான் இருப்பார். அதுதான் மன்னிப்பு. கிறிஸ்தவர்கள் மன்னிக்கப் பிறந்தவர்கள் என அனைவருக்கும் தெரியும். மன்னிக்காத கிறிஸ்தவனை மக்கள் மன்னிக்க மறுப்பர். ஏனெனில் கிறிஸ்துவே அந்த முன்மாதிரியை காட்டி விட்டுச் சென்றிருக் கிறார். தம்மைக் கொல்பவர்களையும் மன்னித்தார். அவர் வழி பின்பற்றி எத்தனைபேர் அந்த பேறுபெற்ற பாக்கியத்தைப் - மன்னிக்கும் பாக்கியத்தை பெற்றனர். எத்தனை புனிதர்கள், எத்தனை மறைசாட்சிகள், எத்தனை மனிதர்கள். எண்ணிலடங்காதவை. கிறிஸ்தவர்களாகிய நமக்கு மன்னிக்க வேண்டும் என்றுபோதனை செய்வது, கதையிலே அந்த சிறுவன் கேட்டதைப் போலவே ஆகிவிடும். தமக்கு ஏற்கெனவே சொந்தமாக இருப்பதை மறுபடியும் பெற்றுக் கொள்ள நினைத்தல் அறிவார்ந்த செயலாகாது.

ஆனால், நம் வாழ்வு எவ்வளவு உள்ளது? நம் சொந்தமாகிய அந்த மன்னிக்கும் மனப்பான்மையை கிறிஸ்தவர்களாகிய நாம் கொண்டுள்ளோமா? அல்லது, சாதாரண வேறு ஒரு மனிதனைப் போல் மன்னிக்கும் மனமில் லாமல் தான் வாழ்கிறோமா? இதைச் சிந்திக்கவே அழைக் கிறது இன்றைய இறைவார்த்தை வழிபாடு. குறிப்பாக, இன்றைய திருவாசகங்களின் மையக் கருத்து ஒன்று! நாம் மன்னித்தால்தான் இறைவன் நம்மை மன்னிப்பார் என்பதே! இதை வேறு சொற்களில் சொல்ல எண்ணினால், இறைவன் நம்மை எத்தகைய அளவிற்கு மன்னிக்கிறார். அவ்வா றெனில், நாம் எவ்வாறாக மற்றவரை மன்னிப்பவராக இருக்க வேண்டும்.

**எவ்வாறு மன்னிப்பது:** இன்றைய நற்செய்தி வாசகத்தில் பேதுரு இயேசுவிடம் 'நான் எத்துணை முறை மன்னிக்க வேண்டும்' என்று கேட்டதோடு நின்று விடாமல், 'ஏழு முறை போதுமா?' என்ற பாணியிலே கேட்கிறார். 7 என்பது முழுமையின் எண். 7 முறை என்றால் மிக அதிகமான ஒரு செயலைக் குறிப்பதாக அர்த்தம். தான் எவ்வளவு பெருந்தன்மையோடு இருக்கிறேன் என்பதைக் காட்ட பேதுரு இவ்வாறு கேட்க, இயேசுவின் பதில் இன்னும் பயங்கரமாக இருக்கிறது. 'ஏழு முறை மட்டுமல்ல, ஏழுமுறை எழுபது' என்கிறார். அதாவது, முழுமையின் எண்ணாகிய 7 முறை மட்டும் போதாது. இன்னும் 7 என்ற எண்ணை பத்து மடங்காக்கினால் எவ்வளவு வருமோ அவ்வளவு மன்னிக்க வேண்டும் என்கிறார். இதில் கவனிக்க வேண்டியது எத்தனை முறைகள் என்பதையல்ல! மாறாக, மறுபடியும் மன்னிக்கும் மனம் கிறிஸ்துவின் சீடர்களிடத்திலே இருத்தல் வேண்டும் என்பதை குறிப்பிடுகிறார் இயேசு. மன்னிப்பில் கணக்கு வைப்பவர் மன்னிப்பதே கிடையாது.

அத்தோடு விட்டுவிடாமல் ஒரு உவமை வாயிலாக இன்னொரு கருத்தையும் விளக்க முனைகிறார். இந்த உவமையின் ஆழமான அர்த்தம் தெரிந்துகொள்ள அதில் வரும் கடன் தொகையை புரிந்துகொள்ளுதல் அவசியம். அந்த அரசர் கொடுத்த கடன் தொகை பத்தாயிரம் தாலந்து. முன்னர் ஒரு தாலந்து என்பது சுமார் 34 கிலோ எடையுள்ள தங்கத்திற்கு ஒப்பாகும். ஆனால், இயேசுவின் காலத்தில் ஒரு தாலந்து என்பது 4.5 கிலோ வெள்ளிக்கு ஒப்பாகும். தற்போதுள்ள மதிப்பின்படி ஒரு தாலந்து சுமாரது 2700 ரூபாய்க்கு ஒப்பாகும். அப்படியென்றால், 10,000 தாலந்து என்பது 270,000,000 ரூபாய் அதாவது 27 கோடி ரூபாய்க்கு ஒப்பாகும். அரசர் அந்த கடன்பட்டவருக்கு தள்ளிவைத்த தொகை ரூ. 27 கோடி.

**ஆனால், ஒரு தெனாரியம் என்பது 75 மில்லி கிராம்** எடையுள்ள வெள்ளி. இயேசுவின் காலத்தில் இதுவே ஒரு நாள் கூலியாகக் கொடுக்கப்பட்டது. இன்றைய உவமையில் வரும் அந்த பணியாளர் தன்னிடம் நூறு தெனாரியம் கடன்பட்டிருந்த உடன் பணியாளரை கட்டாயப்படுத்துகிறான். 100 தெனாரியம் என்பது சுமார் ரூ. 50 மட்டுமே. இயேசு காட்ட விரும்பும் வித்தியாசம் இதுதான். அரசர் 27 கோடி ரூபாய் கடனை தள்ளுபடிசெய்ய, அந்த பணியாளோ வெறும் 50 ரூபாய்க்காக தன்னுடன் வேலை பார்க்கும் சக பணியாளை சித்திரவதை செய்கிறான். அரசர் கேட்கும் கேள்வி நியாய மான கேள்வி. 'நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் உன் உடன்பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா?

இதே போல்தான் நாமும் நடந்து கொள்கிறோம. இறைவன் நமது எத்துணை பெரிய பாவங்களை மன்னிக் கிறார். தம் பேரிரக்கத்தைக் காட்டி எவ்வாறு நம்மை ஏற்றுக்கொள்கிறார். அத்துணை பேரன்பை சுவைத்த நாம், நம் சகோதர சகோதரிகளுக்கு அதே பேரிரக்கத்தையும், பேரன்பையும், மன்னிப்பையும் காட்ட கடமைப்படவில்லையா? இதே கருத்தைத்தான் இன்றைய முதல் வாசகத்தில் சீராக் புத்தகத்தில் வாசிக்கக் கேட்டோம். "நீங்கள் மற்றவரின் அநீதியை மன்னித்துவிடுங்கள். அப்பொழுதுதான் ஆண்டவர் உங்கள் பாவங்களையும் மன்னிப்பார்" என்பதே அது. கிறிஸ்தவர்களின் செபமாகிய 'பரலோகத்தில்' மந்திரத்திலும் இதைத்தான் மன்றாடுகிறோம். 'எங்களுக்கு தீமை செய்பவர் களை நாங்கள் மன்னிப்பதுபோல எங்கள் பாவங்களையும் மன்னியும்' என்று. இது ஒரு நிபந்தனை போன்றது. நாம் மற்றவரது பாவங்களை மன்னித்தால்தான் கடவுள் நமது பாவங்களை மன்னிப்பார்.

**மன்னிப்பது தெய்வ இயல்பு:** மன்னியாது இருப்பதற்கு என்ன காரணம்? முதற்காரணம் நமது ஆணவம். அளவிற்கு மீறினால் அமிர்தமும் நஞ்சுதானே. சுயமதிப்பு அளவு மீறினால் கொல்லும் செய்தியாகிவிடும். அதுதான் ஆணவமும், நான் என்ற அகந்தையும். இவை இருந்தால் எந்த ஒரு உறவு வாழ்க்கையும் சீர்ப்படாது. சீரழிந்துபோகும். இந்த ஆணவத் தினால்தான் நாம் மன்னிக்க மறுக்கிறோம். நமக்கு நடந்த இழப்பை எண்ணி, பிறர் நமக்கு செய்த துரோகத்தை எண்ணி, மனத்திற்குள்ளே அதை புதைத்து, அதற்கு உரமிட்டு நீரிட்டு வளர்த்து, அதை வெறுப்பு என்ற பெரிய ஆலமரமாக வளர்த்துவிடுகிறோம். பின்னர் மன்னிக்காத கொடூரர்களாக வாழ்கிறோம். இதற்கு அடிப்படை காரணம் நமது ஆணவப் போக்கு. இதை தகர்த்தால் வாழ்வு சீராகும். சீராக் புத்தகத் தில் இதைத்தான் கூறுகிறது. 'குற்றங்களை பெரிதுபடுத் தாதே! பகைமையை அகற்று. உன் முடிவை நினைத்துப்பார். அழிவையும் சாவையும் நினைத்துப்பார்.'

**மன்னித்து மறக்க வரம் கேட்போம்.**

## இறுதி சோதனை
(Last Temptation)



**சி**லுவையில் இயேசு வின் இறுதி நேரத்தை வேதனைகளின் உச்சக் கட்டமாகப் பார்த்தல் கூடாது. அது இயேசு வுக்கும் சாத்தானுக்கும் இடையே நடந்த போரின் உச்சக்கட்டம். உலகின் ஒருபுறம் சாத்தான் தன் இலட்சியங்களையும் வாக்குறுதிகளையும் மனிதர்கள் முன் வைக்கிறான். அவை பொய், வெளிவேடம், பணம், புகழ், உலக இன்பம், பகைமை, கொலைபாதகம், பழிவாங்கல்... மறுபுறம் இயேசு தன் போதனையையும் தான் தரும் மீட்பினால் கிடைக்கும் முடிவில்லா பேரின்ப வாழ்வையும் மனிதர்கள் முன் வைக்கிறார். அவை உண்மை, அன்பு, மன்னிப்பு, சமாதானம், சகோதர உறவு... இருவருக்கும் இடையே நடக்கும் மாபெரும் போரின் இறுதி நேரம் கல்வாரி.

இவ்வுலகின் தலைவன் தன் ஆட்சியை அச்சுறுத்துபவரை தோற்கடிக்கக் கடைசிவரை போராடுகிறான். இயேசுவின் பணியின் தொடக்கத்தில் வனாந்திரத்தில் அவரைச் சோதித்தான். ஏமாற்றம் அடைந்த நிலையில் தன் கடைசி ஆயுதத்தை இப்போது எடுக்கிறான். அதுதான் பிலாத்து எழுதிப் பொருத்திய அறிக்கை "இவர் யூதர்களின் அரசர்". யூதர்கள் கொடுக்க விரும்பிய அரச பதவியை இயேசு உதறித் தள்ளி மக்களின் மீட்புக்காகத் தன்னைத் தியாகம் செய்கிறார். ஆனால் தான் மீட்க விரும்பிய பாவிகளாலேயே ஏளனப்படுத்தப் பட்டார். இவர்களுக்காகவா உயிர்த்தியாகம் செய்கிறேன் என்னும் சந்தேகத்தை எழுப்புகிறானோ சாத்தான்?

இயேசுவுக்குக் கண்கள் மங்கி இருண்டு வருகிறது. விண்ணிலும் மண்ணிலும் தோற்கடிக்கப்பட்டவராக காணப்படுகிறார். அவருக்கு வல்லமையும் மகிமையும் அங்கு இல்லை. வனாந்திரத்தில் இயேசு சாத்தானை மூன்று சோதனை களிலும் தோற்கடித்துவிட்டார். சாத்தான் அவரைவிட்டு அகன்றான். ஆனால் இன்று உலகையும் மனிதர்களையும் தன் பக்கம் சேர்த்துக்கொண்டு அவரைத் தாக்க தயாராகி றான். இயேசுவினுடைய போதனைகளைக் கேட்டவர்களையும் எதிரிகளையும் அரசியல் ரீதியாக தன்னோடு சேர்த்துக்கொண்டு "இவன் தன்னை யூதர்களின் அரசன் என்று சொன்னான்" என்று குற்றம் சாட்டினான். இப்போது சாத்தானுக்கு எல்லாம் சாதகமாயிற்று. இயேசு தீர்ப்பிடப்பட்டுவிட்டார். சிலுவையில் அறையப்பட்டுவிட்டார். கைவிடப்பட்டு இறந்துகொண்டிருக்கிறார்.

### இவ்வாரத்தின் இறைவார்த்தை

"உங்களுள் இருவர் மண்ணுலகில் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார்" (மத் 18:20)



## நசரேத்தூர் மரியா 32

Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

இவ்வுலகின் தலைவன் இப்போது உலகம் முழுவதையும் ஆளலாம் என்று எண்ணுகிறான். பாடுகளால் பலவீனமாகி எந்த பலமும் இன்றி இருப்பவரை வெல்ல தனக்கு ஒரு வாய்ப்பு என்று நினைக்கிறான். மனிதர்கள் எவ்வளவு நன்மைகளைப் பெற்றும் தன்னைக் கைவிட்டு சாத்தான் காட்டும் உலகை நம்பிச் செல்கின்றனர். எனவே இயேசு "கேடுகெட்ட இந்த உலகைக் கைவிட்டுவிடுவார்" என்று நினைக்கிறான். ஆனால் இயேசுவோ மனிதர்களை **இறுதிவரை அன்பு செய்தார்.** இறுதிவரை என்றால் உயிரின் கடைசி மூச்சுவரை என்று பொருள் அல்ல. தன்னால் அன்புசெய்யப்பட்டவர்கள் எவ்வளவு கெட்டவர்களாக மாறினாலும் தன் அன்புக்கு அணை போடாமல் இறுதிவரை அன்பு செய்வது. அவருடைய மனிதம் அறவே ஒன்றுமில்லாமை ஆக்கப்பட்டு வானகத் தந்தைக்கு எதிராக அவரை எழும்பத் தூண்டுகிறது. தன்னுடைய மரண வேதனையிலும் துன்பத்தின் இறுதி கட்டத்திலும் அவர் இருப்பதால் அவரை எளிதாக வென்றுவிடலாம் என்று நினைக்கிறான். இயேசு மிகுந்த வேதனையில் தன் மனித இயல்பில் தரைமட்டம் ஆக்கப்பட்டுவிட்டார். இந்த நிலையைச் சாத்தான் பயன்படுத்திக்கொணடு தன்னுடைய இறுதி ஆயுதத்தைக் கையாளுகிறான். அதாவது அவர் கடவுளால் கைவிடப்பட்டுவிட்டார் என்று உணர வைக்கிறார். இப்படி நினைத்திருக்கலாம் அல்லவா? "கடவுளே உன்னைக் கைவிட்டுவிட்டார். அவருக்கு எதிராகவும் மனிதர்களுக்கு எதிராகவும் பழிவாங்கு. நீதியை நிலைநாட்டு" என்றெல்லாம் நினைக்கத் தூண்டுகிறான்.

இயேசுவால் "என் தந்தையே" என்று அழைக்க முடியவில்லை, "என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று தம் தந்தையை அந்நியப்படுத்தி அழைக்கிறார். (தி.பா. 22) "என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள். என் எலும்புகளை எல்லாம் நான் எண்ணிவிட முடியும். என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்துகொண்டார்கள். என் உடையின் மீது சீட்டுப் போட்டார்கள்," என்னும் திருப்பாடல் அவர் நினைவுக்கு வருகிறது. மரியா மனதுக்குள் என்ன சொல்லியிருப்பார்கள். மகன் சொல்வது சரிதான் கடவுளும் அவரைக் கைவிட்டுவிட்டார் என்று நினைத்திருப்பாரோ? மரியாவுக்கு "இது எங்ஙனம் ஆகும்" என்று கேட்கத் தோன்றுமே தவிர கடவுளுடைய செயல் பற்றி ஒரு தீர்மானத்துக்கு வர முடியாது. நாமும் கடவுள் மீது நம்பிக்கை இழக்கும்போது ஒரு புண்ணியத்தைக் கடைபிடிக்கத் தவறிவிட்டோம் என்று எண்ண முடியாது. சாத்தான் நமக்குத் தரும் சோதனையில் தோற்றுவிட்டோம், என்று பொருள். கடவுள் மீது நம்பிக்கை இழப்பது என்பது அவருடைய நன்மைதனத்தில், வல்லமையில் நம்பிக்கை இழப்பது மட்டுமல்ல, அவருடைய போதனையிலும் நம்பிக்கை இழக்கிறோம் என்றுதான் பொருள். சகிப்புத்தன்மை, மன்னித்தல், தீமைக்கு நன்மை செய்தல் போன்ற உயர்ந்த பண்புகளில் நம்பிக்கை இழத்தலும் சோதனையில் தோற்பதுதான்.

ஒரே வார்த்தையில் இறுதி சோதனை என்பது **கடவுள் மீதும் மனிதன் மீதும் நம்பிக்கை இழக்கச் சோதனை.** ஏனெனில் கடவுளும் கைவிட்டுவிட்டார். மனிதரும் அவருடைய கொலைஞராகிவிட்டனர். ஆனால் இயேசுவின் அடுத்த வார்த்தை **"தந்தையே! இவர்களை மன்னியும். ஏனெனில் இவர்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்."** என்னும் வார்த்தைகளால் மனிதர்கள் மீது அவர் நம்பிக்கை இழக்கவில்லை. **"தந்தையே உம் கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்"** என்னும் வார்த்தைகளால் கடவுள் மீது நம்பிக்கையை நிலைநாட்டினார். இயேசு இறுதி சோதனையிலும் சாத்தானை வென்றுவிட்டார். சாத்தான் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்டான். – தொடரும்

### அன்னைக்குக் கரம் குவிப்போம் – 29



(முற்கால தற்காலச் செபங்கள்–தமிழாக்கம் ச.லில்லி மரி) *10–09–2017*

Jean Philippe Chartter

நூறு முகங்களுக்கு மத்தியில் அன்னையே உம் முகம் கண்டேன். பொற்கோவிலில் ஒளி வீசி உடுத்தியிருந்த உம்மைக் கண்டேன். கற்களால் கட்டப்பட்ட ஆலய கோபுர உச்சியில் உம் முகம் கண்டேன். இறந்த உம் மகனை மடியில் தாங்கி அவரை உற்று நோக்கக் கண்டேன். அப்படிக் கொல்லப்பட்டவருக்குத் தாயாக இருப்பதில் பெருமையோடு வீற்றிருக்கக் கண்டேன். மறக்கப்பட்ட ஒரு சிறு கோவிலில் மரத்தால் செய்யப்பட்டு வண்ணம் கலைந்த சிலையாகக் கண்டேன். தெருக்களின் நாற்சந்திகளில் வழிப்போக்கர் வணங்கும் சுரூபமாகக் கண்டேன். சிரசில் முடி சூடி மெல்லிய வெண்ணாடை உடுத்தி அழகோவியமாகக் கண்டேன். மலை உச்சிகளிலும் மரத்தடியிலும் குகைகளிலும் திருப்பயணிகளுக்கு அருள் வழங்கக் காத்திருக்கும் வள்ளலாகக் கண்டேன். இதயம் வாளால் ஊடுருவப்பட்டு சோகமாகவும் கண்டேன். சில இடங்களில் பாதி விழி மூடியிருக்க சிரம் தாழ்த்தி எங்கள் விம்முதலைக் கேட்கக் கண்டேன். சாத்தானின் தலையை மிதித்து வீராங்கனையாக நிற்கக் கண்டேன்.



# நாளும் நலமுடன் வாழ நல் வழி

– சுவாமி ஆ. லூயிஸ்.

சென்ற இதழ் தொடர்ச்சி...

**முழுமை அங்கு முழுமை இங்கு:** படைப்பு, படைக்கின்றவர், மனிதம் இவை மூன்றிலும் நாம் முழுமையை உணர்ந்து ஏற்பது இயல்பாகும். நேர்மறையான உணர்வும், அனைத்திற்கும் அடித்தளமான முழுமையோடு மனிதம் இயல்பாக ஒத்துழைக்கும் போதும் நாம் சுவைப்பதும் அனுபவிப்பதும் ஆரோக்கியமாகும். நாளும் நலமுடன் வாழ நல்வழி இதுவே ஆகும்.

முழுமை நம்மில் பாதிக்கப்படும் போது முழுமையை நம்மில் வளர்க்க முயன்றால் முழுமையான நலனைப் பெற இயலும்.இதை இன்னமும் இயேசுவில் கிறிஸ்தவர்கள் நம்பி நலமுடன் வாழ வழி உண்டு. நமக்கு வெளியில் இருந்து வரும் வியாதிகள் ஐந்து விழுக்காடுகள் என்றால், நமக்குள் இருந்து எழும் ஏனைய எல்லா வியாதிகளையும் மருந்தின்றி நலமோடு வாழ இயலும் என்று எண்ணுவோம், நம்புவோம். நாமே நமக்கு மருந்தாகி நோயற்ற வாழ்வைத் தழுவிக் கொள்வோம்.

**நோய்களின் இரகசியம்:** படைப்பும் படைத்தவரும் நம் ஒவ்வொருவரிலும் ஒன்றித்திருக்கும்போது நோய்களுக்கு வாய்ப்பில்லை. படைப்போடு நிலவும் தொடர்பில், படைத்தவரோடு இருக்கும் உறவில் சிக்கல்கள் நம்மில் ஏற்படும்போது வியாதிகள் இடம் பெறுகின்றன. இவ்வாறு இடம்பெற்ற தொடர் நோயை இயேசு தமது மீட்பால் சரி செய்து வளமோடு நலமோடு வாழ வழி செய்தார். இவ்வாறு நலமுடன் நாம் வாழ வேண்டும் என்பதுதான் இறைவனின் நிரந்தரத் திட்டம் என்பதை நாம் ஏற்பது நல்லது.

இறைவனும் இயேசுவும் ஆவியில் இவ்வாறு ஆரோக்கியத்தையும் ஆனந்தத்தையும் சுவைக்க அருள்பொழிந்து வந்திடினும், இன்னமும் மனித இனம், கிறிஸ்தவ சமூகம் நோய்களோடு இருப்பதற்கு என்ன, யார் எவ்வாறு எப்போது, எப்படி, ஏன் காரணம் என்பதை யோசித்து, தியானித்து பதில் கண்டு பிடித்து மீண்டும் இழந்த சுகத்தைப் பெற்று வாழ வழி உண்டு. இதைத்தான் மனித குலம் ஒவ்வொரு நாட்டிலும் சூழலுக்கு ஏற்ப மருத்துவ முறைகளை வகுத்து வருகிறது. இன்றைய சூழலுக்கு ஏற்ப, கடந்த அனுபவங்களின் பின்புலத்தில் இப்போது முழுமையான மருத்துவ முறைகளை நாம் தேர்ந்து தெளிவு பெற்று, கடைபிடித்தால் அனைவருக்கும் பயனுள்ளதாகும்.

**நோய் நாடி, நோய் முதல் நாடி:** படைக்கின்ற பரமனிடமிருந்து, யாருக்கும், எப்போதும் எவ்வித வியாதியும் வருவதற்கு நிச்சயமாக வாய்ப்பில்லை என்பதை மனித அறிவோடும், அவர் அருளும் நம்பிக்கையோடும் தீர்க்கமாக ஏற்றுக்கொள்வோம். படைப்பிலிருந்தும், இயலும் என்பதையும் அறிந்து உணர்வோம். பிறப்பில் ஏற்படும் பாதிப்பும், பயணத்தில் இடம் பெறும் விபத்துக்கள் வெளியில் இருந்து நம்மை பாதிக்கும் நோய்கள், இருப்பினும் ஒருவருக்குள் இருந்து எழும் நோய்கள்தான் அதிகமாக உள்ளது என்பதால் மிகவும் கவனமாக தன் சுகத்தை ஒவ்வொருவரும் மிகுந்த கவனத்தோடு காத்துக் கொள்வது காலத்தின் கட்டாயமாகிறது.

படைப்பின் பொறுப்பாளி மனிதன் என்பதால் மனிதர்கள் படைப்பையும் தங்களையும் ஆரோக்கியமாக காக்க வேண்டியது கடமையாகிறது. நலம் பேணும் கலையைக் கற்றுக் கொள்வதும் மற்ற கலைகளை விடமேலானது, முக்கியமானது, முதன்மையானது. படைப்பிலும் மனிதத்திலும் பாவத்தின் விளைவாக நல்லதும் கெட்டதும் கலந்திருக்கிறது என்பது எதார்த்தம்.எனவே நாம்தான் விவேகத்தோடு நல்லதை எடுத்துக்கொண்டு கெட்டதை விட்டுவிட வேண்டும்.

காணமுடியாத மனித உயிரின் அடையாளமாய் நமக்குள் இருக்கும் இரத்தம் மிகவும் முக்கியமானது. இரத்தம் நன்றாக இருப்பின் நோய்கள் இல்லை. இரத்தம் கெட்டுப்போய் விட்டால் இரத்தத்தைத் தூய்மைப்படுத்துவது தேவை. நாம் அண்டத்தின் பிண்டம் என்பதால் இரத்தத்தை சரியாக கண்காணிப்பது தேவை. மருத்துவர் திரு.பாஸ்கர் சொல்வதைக் கேட்போம். “இரத்தத்தில் ஏதாவது ஒரு பொருள் கெட்டுப் போயிருந்தால், இரத்தத்தில் ஏதாவது ஒரு பொருள் இல்லாமல் அல்லது குறைந்து போயிருந்தால்; இரத்தத்தின் அளவு குறைந்திருந்தால்; உடல் அறிவும், மனநிலையும் பாதிக்கப்பட்டிருந்தால்” நம் உடலில் நோய்கள் இடம்பெறும். இவைகளோடு நமது ஆன்ம ஆற்றல் குறையும் போது; நமது பஞ்ச பூதங்களின் வீரியம் குறையும் போது பொதுவாக உடலாற்றல் பலவீனப்படும் போதும்; நமது ஆழ்மனதில் பதிந்திருக்கும் எதிர்மறை உணர்வுகள்: நமது புத்தி சரியாக சிந்திக்க முடியாத போதும் வியாதிகள் நம்மில் பிறக்க வாய்ப்புண்டு. இரத்தம் கெட்டுப் போவது நோய்களுக்குக் காரணமாகும். அனைத்து நோய்களையும் குணப்படுத்துவதற்கு வழி, நமது இரத்தத்தை சுத்தப்படுத்துவதாகும். அகமும் புறமும் சுத்தமும் அசுத்தமும் சூழ்ந்துள்ளது. எனவே அகமும் புறமும் சுத்தத்தைப் பேணி வளர்ப்போம், அசுத்தத்தை அன்றாடம் அகற்றுவோம். இது நம்முடைய தனி வாழ்வில், குடும்ப வாழ்வில், சமூக வாழ்வில் எந்த அளவுக்கு இடம்பெற நாம் விழிப்புணர்வு பெற்றுள்ளோம். என்பதுதான் நாம் தினம் சந்திக்கும் சவாலாகும். இதை கொஞ்சமாவது யோசிக்காமல் உடனடி நிவாரணத்திற்காக நாம் பயத்தோடு பெரிய மருத்துவமனைகளை, புகழ்பெற்ற மருத்துவர்களை நாடி செல்வதைத்தான் அவசரமாக நிறைவேற்ற நலனையும் நிதியையும் விரயமாக்குகின்றோம். நின்று, கவனித்து, பின் பயணத்தை மேற்கொள்வோம். விழித்துக் கொண்டால் விழிகள் மகிழ்வின் துளிகளை சுரக்கும்.

**நலன் நம் கையில்:** ஒவ்வொருவருக்கும் உடல் அறிவு, மன அறிவு, ஞான அறிவு என மூவித அறிவை கடவுள் வழங்கி வருகிறார். இவைகளை ஒருங்கிணைத்து ஒவ்வொருவருக்கும் வீட்டில், பள்ளியில், கோயிலில் வழிகாட்டும் போது முழுமையான அறிவில் நோயின்றி வாழ இயலும். இப்பொறுப்பினை பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஞான வழிகாட்டிகள் பொறுப்போடு ஏற்று கனிவோடு வழங்கி, நலமோடு வாழவும் வாழ வைக்கவும் இயலும்.

கடவுள் படைத்தது எல்லாம் நல்லது எனவே நல்லது அனைத்தையும் அளவோடு பசித்து, தாகமெடுத்து உட்கொள்வது நன்று. உட்கொள்வதில் இருக்கும் நல்லவைகளை உடல் உறுப்புகள் ஏற்றுக்கொண்டு, உதவாதவைகளை உடல் உறுப்புகள் அப்புறப்படுத்துகின்றன. உடல் வெளியில் தள்ளுவதைத் தடை செய்ய வேண்டாம், தேடுவதைத் தருவதற்கு தயங்க வேண்டாம்.

இரத்தத்தில் உள்ளக் கூறுகளை நல்லக் கூறுகளாக வைத்திருப்பது நமது பொறுப்பில் உள்ளது. நம் உடலில் இருக்க வேண்டிய இரத்தத்தின் அளவையும் சரியாக பராமரிப்பதும் நமது கையில் உள்ளது. இரத்தம் சரியானால் அதுவே மனதையும் உடலையும் ஆரோக்கியமாக செயல்பட உதவும் என்பதில் சந்தேகமில்லை.

- தொடரும்...



# உலகின் இறுதி நாள்

–Dr. அ. மதலைமுத்து, புதுவை–3.

**உலகம் இன்று:** நாம் உலகின் இறுதி நாளை நெருங்கி விட்டோமா? இவ்வாறு பலரின் மனதில் வினா எழுவதற்கு காரணம் இல்லாமல் இல்லை. ஒருபுறம், உலக வெப்பமய மாதல், ஓசோன் ஓட்டை பாதிப்பு, அணு, மின் அணு மற்றும் இரசாயன கழிவுகளின் குவிப்பு ஆபத்து, விஷமாக்கப்பட்ட நீர்நிலைகள் மற்றும் காற்று மண்டலம் போன்றவை, உலகை நாம் வாழ தகுதியற்றதாக்கி கொண்டு வருகிறது. நாம் விதைத்ததை நாம் தான் அறுவடை செய்ய வேண்டும். மறுபுறம், மனித நேயம், சமூக நீதி மற்றும் நேர்மை நம் மனதில் ஜீவ சமாதியாக்கப்படுவதாகத் தோன்றுகிறது. ஏனெனில், மக்களை கொன்று குவிக்கும் போர்கள் பயங்கரவாத மற்றும் தீரவாதத் தாக்குதல்கள், அரசியல் பயங்கரவாதம் போன்றவை அடங்காத புயலாக வீசுகின்றன. மேலும், 60 வயது முதியவர் 5 வயது சிறுமியை வன்புணர்ச்சி செய்தல், கல்லூரி முதல்வர் மாணவியிடம் மற்றும் அதிகாரி பெண் பணியாளர்களிடம் பாலியல் குற்றம் செய்தல், மாட்டுக் கறி உண்கிறார் என்பதற்காகக் கொல்லப்படுதல், நாலாயிரம் ரூபாய்க்கு பாமரரான நாம் வங்கி வரிசையில் நிற்கும் போது 200 கோடி, 500 கோடி ஊழல் செய்து பிடிபட்டவர்கள் காரில் உலா வருவதும், அமைச்சர்களாக இன்னும் நீடிப்பதும், விவசாயிகள் பராரியாக டெல்லி வீதியில் வீசப்படுதல், பாதுகாப்பான வாழ்விற்காக நீதி கேட்டு போராடும் ஏழை கிராம பெண்களை போலீஸ் தாக்குவதும், மேலும் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைப்பது போன்ற ஆணவ, அடக்குமுறை மற்றும் அநீதி நிகழ்வுகள், சமுதாய அழிவுக்கும் தீமைகளோடு சிலர் வைத்துக்கொண்ட கூட்டணிக்கும் சான்றாகும்.

**அநீதியின் விஸ்வரூபம்:** ஆள்பவர்கள் அழிப்பவர்களாக இருக்கிறார்கள். பொய்மை பாயில் தீமை மலையை சுருட்டி மறைத்துவிடலாம் என்று நீதிமான் போல் அவர்கள் பேசுவதை வருத்தத்தோடு பார்க்கிறோம். எங்கும் லஞ்சம் எதிலும் லஞ்சம். மணல், பாறை, மருந்து, மருத்துவ உபகரணம், நிர்வாகம், உணவுப் பொருள் கட்டுமானம்... எந்தத் துறையில் ஊழல் இல்லை. மக்களின் வியர்வை, மற்றும் இரத்தத்தை, உணர்வு மற்றும் நீதியை உறிஞ்ச எல்லா மட்டத்திலும் பணம், மற்றும் பதவி பேரம் நடப்பது தமிழருக்கு தலை குனிவைத் தருகிறது, மேலும் ஏழ்மை, துன்ப பாதாளத்தில் நம் குடும்பங்களையும், நம் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் தள்ளுகிறது. ஆனாலும் விதி விலக்காக சில நல்லவர்கள் அநீதிக்கு எதிராகப் போராடுகிறார்கள், மேலும் மக்கள் நல உதவிகளை நன்றாகச் செய்து வருகிறார்கள். அவர்களை இனங்கண்டு அவர்களோடு தோளோடு தோள் நின்று, ஒடுக்கப்பட்டோருக்காகவும் ஒதுக்கப்பட்டோருக்காகவும் வாழ கடவுள் நம்மை அழைக்கிறார்.

**தந்தைக்கு மட்டும் தெரியும்** இன்று மக்களிடம் அடிப்படையான நடத்தை ஒழுக்கம் மாறிவிட்டது. இதுவரை நடந்திராத வக்கிரங்கள், மற்றும் துரோகங்கள் இன்று அரங்கேறுகின்றன. ஒவ்வொரு சந்ததியும், “காலம் கெட்டுப் போச்சு. அக்கிரமம்! அக்கிரமம்! இது உலகம் அழியும் காலம். எனவேதான் இப்படியெல்லாம்” என்று யூகிக்கிறது. நம்பிக்கையுள்ள கிறிஸ்துவர்கள், தம் இறுதி நாளுக்காகவோ அல்லது காலத்தின் இறுதி நாளுக்காகவோ, தங்கள் பண்புகளை நெறிபடுத்திக் கொண்டு, தயார் நிலையில் தங்களை வைத்துக் கொள்ள தினம் முயலுகிறார்கள். (1தெச.5:1-6 (எபி.9:27). எந்த நேரம் அந்த இறுதி நாள் வரும், ஆண்டவர் மீண்டும் வருவார், என்று யாரும் கூற இயலாது. ஆனால், அவர் நிச்சயம் வருவார். ஆண்டவர் இயேசு, “ (உலகம் அழியும்) அந்த நாளையும் வேளையையும் பற்றித் தந்தைக்குத் தவிர வேறு எவருக்கும் தெரியாது.” (மாற்கு.13:32) என்று கூறியுள்ளார். ஆகவே, ஒவ்வொரு நாளும் நாம் ஆண்டவர் திருமுன் நம் முகத்தைக் காட்ட, மற்றும் ஆண்டவரை வரவேற்க தயாராக இருக்க கடவுள் நம்மை அழைக்கிறார். ஏனெனில், செம்மறியின் “வாழ்வின் நூலில்” தன் பெயர் எழுதியிராவிட்டால், நிரந்தர இருளும் நெருப்பு ஏரியில் எறியப்படுதலும் தண்டனையாக நிச்சியம் விதிக்கப்படும் என்றும் கிறிஸ்துவ விசுவாசிகளான நமக்குத் தெரியும். (திருவெ.20:15;21:8) நாமே நம் மனித நேய, நேர்மை, மற்றும் நீதி நிலையை சோதித்து பார்க்கவும், மேலும், ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிவதன் மூலம் கடவுள் திருமுன் நீதிமானாக வாழவும் அழைக்கப்படுகிறோம். (2கொரி.13:5)

**ஆண்டவரின் திருவருகை:** “ஆண்டவருடைய நாள் திருடனைப் போல வரும். வானங்கள் பெரு முழக்கத்துடன் மறைந்தொழியும்;.... மண்ணுலகமும் அதன் செயல்களும் தீக்கிரையாகும்.” (2பேதுரு.3:10) அந்த நாள் நிரந்தரத்தை முடிவு செய்யும் ஒரு நாளாக இருக்கும். திருத்தூதர்கள் பார்த்துக் கொண்டே இருந்த பொழுது கிறிஸ்து மேலே வான் வீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். வானதூதர், இந்த இயேசு உங்களிடமிருந்து எவ்வாறு விண்ணேற்ற மடைந் தாரோ அதைப்போல அவர் திரும்பி வருவார் என்று வாக்களித்தனர். (திருத்.1:9-11) திருத்தூதர் பவுலும் “தலைமை வானதூதரின் குரல் ஒலிக்க கடவுளுடைய எக்காளம் முழங்க ஆண்டவர் வானினின்று இறங்கி வருவார்” என்றார். அந்த ஒலி கேட்கும் உலகம், இது இறுதி நாள் என்றுத தெரிந்து கொள்ளும். “........அப்பொழுது, கிறிஸ்து மீது நம்பிக்கை கொண்ட நிலையில் இறந்தவர்கள் முதலில் உயிர்த்தெழுவார். பின்னர் உயிரோடு எஞ்சியிருக்கும் நாம், அவர்களோடு மேகங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டு, வான் வெளியில் ஆண்டவரை எதிரகொள்ளச் செல்வோம். இவ்வாறு எப்போதும் ஆண்டவரோடு இருப்போம்” (1தெச.4:16-17)

**புதிய விடியல்:** ஆண்டவர் இயேசு, “.... அப்போது... நல்லன செய்தோர் வாழ்வு பெற உயிர்த்தெழுவர்; தீயன செய்தோர் தண்டனைத் தீர்ப்புபெற உயிர்த்தெழுவர்” (யோவான்.5:28-29) என எச்சரிக்கிறார். பிறகு, நல்லோர் மாசுபடுத்தப்பட முடியாத உடலை அணிந்து கொள்வர். (1கொரி.15:35-54) அந்த இறுதி தீர்ப்பு “இறந்தோருள் சிறியோர் பெரியோர் ஆகிய” அனைவருக்கும் சமமாக நடக்கும். (திருவெ.20:12) நாம் நம் செயல்பாடுகள், மற்றும் நமது விவிலியத்தின் கீழ்படிதல் தன்மைக்கேற்ப தீர்ப்பிடப் படுவோம். (சபை.12:13-14) (யோவா.12:48) (திருவெ.20:12-13) ஆகவே, நாம் ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்படிந்து வாழுகிறோமா? இறுதி நாளுக்காக அஞ்சாதவாறு தயாராகிறோமா என்று சோதித்து பார்த்து வாழுவோமா நண்பர்களே? ●

# எழுவீர் புத்துலகம் படைத்திடுவீர்

## 12) புது உறவு பதிய நல்லதொரு குடும்பம்



இறை ஊழியன் அருட்திரு**அ.பெலிக்ஸ் ஜோசப்**,சே.ச. திருச்சி.

காந்தியடிகளை ஒரு கூட்டத்திற்கு அழைத்திருந் தார்கள். அவரும் கூட்டத்திற்கு வேண்டியப் பொருட்களை எடுத்து அழைத்த இடத்திற்கு விமரிசையாக விரைந்து சென்றார். சென்ற இடத்தில் யாரையும் காணவில்லை. அழைத்தவர்களும் அங்கு தென்படவில்லை. பக்கத்து இடங்களைச் சுற்றிப் பார்த்தார். அங்கே உணவு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். அங்கே ஒன்று தெரியாதவர்கள் போல் சென்றார்கள். பாத்திரம் கழுவச் சொன்னார்கள். கழுவினார். காய்கறிகளை வெட்டவும் உதவினார். அப்பொழுது கூட்டத்திற்கு மக்கள் விரைந்து வந்து கொண்டிருந்தார்கள். கூட்டத்தை ஏற்பாடு செய்தவரும் காந்தி அடிகளைக் காணவில்லை என்று தேடினார். இறுதியாக உணவு தயாரிக்கும் இடத்திற்கு வந்து பார்த்தார். அங்கே காய்கறிகளை வெட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். உடனே அவரிடம் மன்னிப்பு கேட்டு கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார். என்ன வியப்பு... ஆச்சரியம். அவர் தான் தேசத்தந்தை மகாத்மா. காலம் தவறாமை, மற்றவர்கள் வந்தாலும் வராமல் இருந்தாலும் நாம் அங்கே சென்று பிரசன்னமாயிருக்கும் நம் நற்குணத்திற்கு மெருகு கொடுக்கும், நம் பண்புக்கு ஒரு முத்திரை வழங்கப்படும்.

டால்மியா சிமெண்டு நிறுவனத்திற்கு தலைவர், வளனார் கல்லூரயில் மாணவப் பருவத்தில் புத்தில்ல விடுதியில் படித்துக் கொண்டிருந்தார். பிற்பகல் விடுதியில் உணவு உண்ட பின் உறங்க ஆரம்பித்தார். மணி அடித்தது காதில் விழவில்லை திடீரென்று எழுந்து பார்த்தார். நேரம் கடந்துவிட்டது. வேகமாக கல்லூரி முதல்வரைக் காணச் சென்றார் காரணங்கள் கூறி காலதாமதத்திற்கு மன்னிப்புக் கேட்டார். தொடர்ந்து உறங்கி விட்டு வாரும் என்று பதில் வந்தது. தொடர்ந்து தன் விடுதிக்குச் சென்றார் உறக்கம் வரவில்லை. தான் செய்த குற்றத்தை உணர்ந்தார். அன்றே காலதாமதமாக வரக்கூடாது என உறுதி எடுத்தார். - தொடரும்...



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



## 17ஆம் படலம்

யாவே கடவுள் ஏவிய நான்காவது ஈ வாதையால் எகிப்து நாடே பாழ்பட்டது; இவ்வாதை பார்வோனையும் எகிப்திய தெய்வங்களையும் தலைகுனிய வைத்தது. இது, கடவுள் மக்களாகிய இசுரயேலரை மீட்பதற்குரியஅடையாளமாயிற்று. இவ்வாதையினின்று தானும் நாடும் விடுபடமோசே, ஆரோனுக்குரிய ஆண்டவரின் தலையீட்டால்தான் இயலுமென்னும் முடிவுக்குப் பார்வோன் இரண்டாம் இராம்சேசு வந்தான்!

52 **நம் தாய்த்திரு இந்திய நாடு, அன்றைய எதேச்ச அதிகார பார்வோனின் எகிப்து நாடு அல்ல. இந்திய நாட்டில் வாழும் 125 கோடி மக்களுக்கும் இந்திய குடியரசு அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள, அடிப்படைக் குடிஉரிமையைப் பறித்து, வெறியாட்டம் ஆட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த ஓர் அரசுக்கும் குடியரசு தத்துவத்தின் அடிப்படையில் அதிகாரம் இல்லை.**

இந்திய நாடு எகிப்தல அறிவோம்;
இருந்தந் நாளிலே ஆண்டஅப் பார்வோன்,
தந்திரம் செய்து இசுரேல் இனத்தரைத்
தனக்கடி பணிய வைத்தனன் கொடியோன்!
முந்திய அரச முறையெலாம் ஒழிந்தே
முற்றிலும் மக்கள் ஆட்சியும் மலர்ந்ததே!
புந்தியில் ஏந்தியே புகழ்ந்துநம் பாரதம்
பூதலம் வியக்குமோர் நாடெனக் காட்டுவோம்!

(இருந்தந் நாளிலே - அப்பழங்காலத்தில் அரசனாய் இருந்து எகிப்தில் தன்னாட்சி புரிந்த பார்வோன்; முந்திய அரச முறையெலாம் ஒழிந்து-பழங்கால எதேச்ச அதிகார அரசமுறைகள் மாறி)

53 **இந்தியநாடு பல்வேறு மொழி, இன, சமய, பண்பாடுகளைக் கொண்ட குடிமக்கள் வாழும் நாடு. இந்நாடு ஒன்றாய் ஒன்றித்து வாழ, வேற்றுமையில் ஒன்றுபட்டு வாழ்வதே ஏற்புடைய வாழும் வழியாகும். இந்நெறி முறைக்குப் புறம்பாகச் செயல்படும் அனைவரும் நாட்டின் ஒற்றுமை வாழ்வைச் சிதைக்கும் வன்முறையாளர்களே ஆவார்கள்.**

வேற்றுமை தனில்நாம் ஒற்றுமை காண்போம்
வீடுகள் பற்பல நாடென் பதொன்றுதான்;
ஆற்றினின் கிளைகள் பற்பல வாயினும்
அவைசென் றடைவதோர் கடலது தானே?
ஏற்றுநாம் இயற்கை நெறிப்படி வாழ்ந்தால்
இறையொளி நமக்கு வழிவகுத் தணைக்கும்;
போற்றுவோம் சேரீர் புத்தொளி பாய்ச்சி
புதுப்பிறப் பெடுத்திடும் பாரதம் காண்போம்!

(இறையொளி-எல்லாம் வல்ல ஏக பரம்பொருளாகிய கடவுளின் இரக்கப் பேரொளி; புதுப்பிறப்பெடுத்திடும்-உண்மையான இறையன்பும் மனித நேயமும் கொண்ட, புதிய பண்பட்ட பாரத தேயமாக மலர்ந்து மணம் பரப்பும்)

54 **நம் பாரத நாட்டில் பல மொழியினரும் பல சமயத்தினரும் வாழ்கின்றார்கள். இவர்களுள் சமய அடிப்படையில் பெரும்பான்மையாக உள்ளவர்கள், சமய அடிப்படையில் சிறுபான்மையாக உள்ளவர்களைப் (இசுலாமியர், கிறித்தவர்) புறமதத்தினர் என்றும் இந்நாட்டில் சம உரிமை கொண்டாடத் தகுதி அற்றவர்கள் என்றும் கூறும் பிரிவினை வாதத்தினர், இந்நாட்டின் ஒருமைப்பாட்டைச் சிதைப்பவரா வார்கள்.**

பாரதம் உலகில் பழம்பெரும் நாடு,
பற்பல இனத்தவர் வாழ்ந்திடும் நாடு;
ஈரமே இல்லா வன்மன மாந்தர்,
"என்னினம் மட்டும் மதத்தின் பேரால்
பூரண உரிமை பெற்றதாய் இருக்க,
புறமதத் தாரிவண் வாழ்ந்திடச் சகியோம்!
காரணம் வேறு எதுவுமே வேண்டாம்,
கடந்திடு வீர்" என விளம்புவோர் உளர்இவண்!

## பேராசிரியர் பா. வளன் அரசு அவர்களுக்கு திருக்குறள் செயல் வேந்தர் விருது

உலகத் திருக்குறள் தகவல் மையத் தலைவரும் தூய யோவான் கல்லூரி முன்னாள் தமிழ்த் துறைத் தலைவரு மான **பேராசிரியர் பா. வளன் அரசு** திருக்குறள் செயல் வேந்தர் என்னும் விருது பெற்றார்; நல்லாசிரியர் முன்னவர் வை. இராமசாமி திருக்குறள் மாமணி விருது பெற்றார். சென்னை திருவள்ளுவர் தொண்டகமும் காஞ்சிபுரம் பிரசாந்தி குருகுலமும் இணைந்து நடத்திய ஐம்பெரு விழாவில் பேராசிரியர் கோ. பார்த்தசாரதி தலைமையில் திருவள்ளுவர் தொண்டு நிறுவனத் தலைவர் இராம் மோகன் அரசு விருதுகளை வழங்கிப் பாராட்டினார்; பேராசிரியர் பா. வளன் அரசு சிறப்புரை ஆற்றினார். வள்ளுவர் கோட்டத்தில் உலகத் திருக்குறள் மையத்தில் சார்பில் நடந்த நூல் வெளியீட்டு விழாவில், பேராசிரியர் பா. வளன் அரசு எழுதிய திருக்குறள் விளக்கவுரை நூலினைப் பேராசிரியர் கு. மோகன்ராசு வெளியிட்டுப் பாராட்டிப் பேசினார் "எழுகதிர்" மாத இதழ் ஆசிரியர் அரு. கோபாலன், முனைவர் தாவீது பாசுகரதாசு ஆகியோர் பாராட்டுரை நல்கினர். பேராசிரியர் பா. வளன் அரசு ஏற்புரை வழங்கினார்.

(வன்மனமாந்தர்-மனித நேயம் இல்லா உள்ளத்தினர்; புற மதத்தினர்-இநாட்டிற்குப் புறத்தே உள்ள நாடுகளில் இருந்து வந்து பரவிய சமயங்களை ஏற்று வாழும் இந்நாட்டின் பழங்குடியினரைப் புறமதத்தினர் என்று வாய் கூசாமல் கூறுகின்றனர்.)

55 **நம் நாட்டில் வாழும் 125 கோடிமக்களும் இந்திய நாட்டின் சமய உரிமைக் குடிமக்கள். குடிஉரிமைக்கு எதிராய்ப் பேசுவது, செயல்படுவது குடியாட்சிக் கோட்பாட்டிற்கே எதிரானவை. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்று நாட்டை ஆளும் அனைவரும் மக்களின் குடி உரிமையைக் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பாளர்கள் ஆவார்கள்.**

இப்படி வன்மனக் கொடிய வராக
எப்படி இவரும் மாறினர் இங்கே?
ஒப்பிட ஒல்லா அரசியல் போக்கிது!
உகந்தது அல்லவே குடியர சிதற்கது!
தப்பிது என்பதை அறிந்திடச் செய்வது
சமத்துவ அரசியல் வாதியர் கடமையே;
எப்படி உலக நாட்டினர் ஏற்பார்?
இணைந்துநாம் ஒன்றாய் வாழ்வதைக் காப்பீர்.

(ஒப்பிட ஒல்லா - சமதர்ம குடியாட்சித் தத்துவத்துக்கு ஏற்புடையதென்று ஒப்புக்கொள்ள முடியாதது; குடியர சிதற்கது - சமய அடிப்படைவாதப் போக்கு இந்தியக் குடியரசிற்கு ஏற்புடையது அன்று)


### குணமளிக்கும் நற்செய்தி ஆராதனைக் கூட்டம்

**நாள்: 16-09-2017 (சனிக்கிழமை)**

நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை

இடம்: **புனித சவேரியார் மேய்ப்புப்பணி** & **கலைத்தொடர்பு நிலையம்.**

(புனித பிரான்சிஸ் சேவியர் ஆலய வளாகம்) உப்பளம், பாண்டிச்சேரி-1.

**நடத்துபவர்:** அருள்தந்தை **கிளாடியூஸ்**

(இயக்குநர், மறைமாவட்ட அருங்கொடை பணிக்குழு, கோயம்பத்தூர் மறைமாவட்டம்)

**அழைப்பவர்:** அருள்தந்தை **பீலோ**, இயக்குநர்

மற்றும் மைய செப தயாரிப்புக் குழுவினர், புனித சவேரியார் மேய்ப்புப்பணி & கலைத்தொடர்பு நிலையம், உப்பளம், புதுவை-1.

**தொடர்புக்கு:** 9443244787 / 9750365723 / 9842333363


### வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சர்வவியாபி இதழில் விளம்பரம் கொடுக்க விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

2017-2018 சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். தவறினால் இதழ் நிறுத்தப்படும். - ஆசிரியர்.

## 15-ஆம் ஆண்டின் தொடக்கத்தில்
## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்து சிறப்புப் போட்டி -169
### செப்டம்பர் மாத வெளியீடு. (2017)
### அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ், தாராபுரம்.



கிறிஸ்துவில் எனதன்பு இறைமக்களே! நம் ஆண்டவர் இயேசுவின் அன்பும் சமாதானமும் உங்களுடன் இருப்பதாக! தமிழகத்தில் கத்தோலிக்க கோட்பாடுகளை எடுத்துரைத்து விசுவாசத்தைப் பரப்பி இறையரசைக் கட்டியெழுப்பும் இறைபணியில் "சர்வவியாபி" வார இதழ் அரும்பணியாற்றியிருக்கிறது. இந்தப் பணிக்காக "சர்வ வியாபியை" பாராட்டும் இவ்வேளையில், சர்வ வியாபி கிறிஸ்துவின் மதிப்பீடுகளான நீதி, சமத்துவம், அன்பு நிறைந்த இறையரசைக் கடடியெழுப்ப அனைத்துத் தரப்பு மக்களையும் ஈடுபடச் செய்யும் பயனுள்ள ஊடகமாய் விளங்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன். சிறப்பாக அருள்சகோதரர் அ.மே. ஜேம்ஸ் அவர்கள், இறைவார்த்தையை அனைவரின் வாழ்விலும் மிளிர கடந்த 14 ஆண்டுகளாக தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டியை "சர்வவியாபியில்" நடத்தி வருகிறார். இப்போட்டி செபம்டம்பர் மாதத்தில் 15-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த விவிலிய குறுத்துக்கெழுத்துப் போட்டியை சிறப்பாக வழிநடத்தி வரும் அருள்சகோதரர் அவர்களை உளமார வாழ்த்துகிறேன். இவ்விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி இறைவார்த்தையை இன்னும் அதிகமாக வாசிக்கவும் தியானிக்கவும் பேருதவியாய் அமையும் என்பதில் சந்தேகமில்லை. அருள்சகோ.அ.மே. ஜேம்ஸ் அவர்களின் இப்பணி இன்னும் பல நிலைகளில் தொடர வேண்டும், வளர வேண்டும் என ஆசித்து செபிக்கிறேன். இறை விசுவாசிகள் அனைவரும், இதனை வாங்கிப் படித்து பயன் பெறவேண்டும் என ஆசிக்கிறேன். மேலும் இந்த விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி மக்களை எளிதாக சென்றடைய ஓர் பாலமாக அமைந்திருக்கும் சர்வவியாபி வார இதழின் ஆசிரியர் அருள்பணி. சி. அந்தோனி ரோச் அவர்களையும் ஒவ்வொரு மாதமும் பரிசு உதவிகளை வழங்கி வரும் உபகாரிகளையும் வாசகப் பெருமக்களையும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

இறையாசீர், இவண் மேதகு முனைவர் **பெ. சௌந்தரராஜு** ச.ச. வேலூர் ஆயர்.

**குறிப்பு:** 1) பதில்களை **26–10–2017** க்குள் அனுப்பி வைக்கவும். 2) ஆசிரியரின் இறுதித் தீர்ப்பே முடிவானது. 3) பதிலை அதிகாரம், வசனத்துடன், சரியான முகவரியுடன் எழுதவும். 4) சிறப்பு போட்டியாக இருப்பதால் குலுக்கல் முறையில் முதல் **25** நபர்களுக்கு பரிசுகளும், அடுத்து வரும் **25** நபர்களுக்கு சர்வவியாபி இதழ் ஓராண்டிற்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும். 5) பதில்களை இன்லேண்ட் (உள்நாட்டு) கடிதத்தில் (அ) ஐந்து ரூபாய் ஸ்டாம்பு ஒட்டிய கவரில் மட்டுமே எழுதி ❖குறியிட்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன். 6) அல்லது e-mail: soosaimariarajendran@gmail.com என்ற முகவரிக்கும் அனுப்பலாம்.

**இடமிருந்து வலம்:**
1. தங்கள் நெறிகேட்டினால்............ஒடுக்கி விடுகின்றார்கள்.
3. தூய ஆவியின் வழியாய்க்...........அன்பு நம் உள்ளங் கையில் பொழியப்பட்டுள்ளது.
7. திருச்சட்டமும்...........ஒன்றுதானா?
11. அவர்...........எவருக்கும் விளங்குவதில்லை.
12. கடவுளின்...........ஞானம் மிக்கது.
16. இத்தகைய............யார்தான் செய்ய இயலும்?
22. அவருக்கு எந்தக் குறையும் இராதவாறு........ கொள்ளுங்கள்.
23. .......... அங்கிருந்து நீங்கள் வழியனுப்பி வைப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

**வலமிருந்து இடம்:**
2. உங்களுக்கு வரப்போகும்..........ச் சேமித்து வைக்கிறீர்கள்.
3. அவர்கள் நம்பாததால்............நம்பகத்தகாதவர் ஆகிவிடுவாரா?
6. நீங்கள் ...........நம்பிக்கையில் நிலையாய்த்தான் இருக்கிறீர்கள்.
7. ............உங்கள் மீது ஆட்சி செலுத்தக்கூடாது.
8. இவ்வுலக ..............கடவுள் முன் மடமையாய் உள்ளது.
10. அவ்வாறே நமக்கு..............ஒருவரே.
13. வெளியே போராட்டம் உள்ளே.............
14. ஒவ்வொரு............அதற்குரிய உருவைக் கொடுக்கிறார்.
15. தற்புகழ்ச்சி கொள்ளாது இறுமாப்பு.........
19. உங்களை............காணும்போது தாழ்ந்து போகிறேன்.
21. நீங்கள் ஏமாந்து.............வேண்டாம்.

**மேலிருந்து கீழ்:**
1. உங்கள் கடின................உங்களை மனம்மாற விடவில்லை.
4. ஆகவே...........திருச்சட்டத்தின் நிறைவு.
5. அவர் தமது...........மாட்சியை வெளிப்படுத்த விரும்பினார்.
10. பெண்............பெருமையாய் இருக்கிறார்.
13. இவை............திருச்சபையைக் கட்டியெழுப்பும் வகையில் நடைபெற வேண்டும்.
15. நான் பொறுப்பற்ற முறையில்............மாற்றி விட்டேன்.
17. ..............அவமானத்திற்குரிய ஒன்றுதான்.

**கீழிருந்து மேல்:**
4. .............ஒன்றே
9. கடவுளின் அருள்............எத்துணை மிகுதியானது.
10. மூதாதையரை முன்னிட்டு அவரது அன்புக்கு உரியவர்கள்.........
15. ................வழியை அவர்கள் அறிவார்.
17. இந்த ஈடு..............வல்லமை எங்களிடமிருந்து வரவில்லை.
18. நாங்கள் உங்களிடம் மனம் விட்டுப்..............
20. அவர் என் பணியில் பங்காளியும்............உழைப்பாளரும் ஆவார்.
21. நான் அங்கு வரும்............அது தயார் நிலையில் இருக்கும்.

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி:**

❖ அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ், தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்து சிறப்புப் போட்டி-169** தூய மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்
தாராபுரம் – **638 656**, திருப்பூர் –Dt. செல்: **99423 11068**

### உரோமையர் முதல் 2 கொரிந்தியர் வரை.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | 2 | | 5 |
| | | | 3 | | | | | | |
| | | | | 6 | 12 | | | | |
| | | 7 | | | | | 8 | | |
| 16 | | | | | | | | 10 | |
| | | | | 13 | | | 19 | | |
| 4 | | 23 | | | 9 | ■ | | | |
| | | 22 | | | | | | | |
| 11 | | | | | | | 15 | 20 | 17 |
| ■ | 18 | | 21 | | | | | 14 | |

## விண்ணக வாழ்வின் மூன்றாம் ஆண்டு நினைவு

தோற்றம்:10-04-1922



மறைவு:13-09-2014

**திருமதி. கண்ணா விக்டர்**

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்–யோ.11:25

அன்பின் ஊற்றே இறைவா! இவ்வுலகில் எங்களுக்கு வழி காட்டியாய் இருந்து உம்மிடம் அழைக்கப்பட்ட எங்கள் அன்னைக்கு நித்திய இளைப் பாற்றியையும், முடிவில்லா ஒளியையும் தந்தருள உம்மிடம் மன்றாடுகிறோம்.

உம் நினைவில் வாழும்
**மகள்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்.**

13–9–2017 புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு வினோபா நகர், புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.



## புனிதர்கள் நமக்கு தேவையா?

சிந்தனைச் செல்வர், பேராசிரியர் அ.குழந்தைராஜ்-காரைக்குடி

“**வ**த்திக்கானுக்கு போனீங்கன்னா உங்களை புனிதராக்கிவிடுவார்கள்” என்று சிலர் கேலி பேசுவதை பார்த்திருப்பீர் கள். இதிலும் நூற்றுக்கு ஒரு பங்கு உண்மை இல்லாமல் இல்லை. இருந்தாலும் எல்லாருக்கும் வெகு எளிதாக இந்த புனிதர்கள் பட்டம் கொடுக்கப்படுவதில்லை.

ஒரு பாஸ்டர் வத்திக்கானுக்கு போனார். புனித பேதுரு தேவாலயத்தையும் அருங்காட்சியகத்தையும் பார்த்த பின்னர், திருத்தந்தையை பார்த்து ஒரு கேள்வி கேட்க வேண்டும் போலிருந்தது. திருத்தந்தையையும் பார்த்தார். “போப்பாண்டவர்கள் அவர்களே ! நீங்கள் என்ன எல்லாருக் கும் புனிதர் பட்டம் வெகு எளிதாக கொடுத்து விடுகிறீர்கள் எனக்கு அதில் உடன்பாடு இல்லை” என்றார். நமது திருத்தந்தை “அய்யா பாஸ்டர் அவர்களே, நீங்கள் நேரே அருங்காட்சியகத்துக்கு போங்கள். வலது புறமாக உள்ள பகுதிக்கு போய் அங்கே உள்ள பலரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்து வாசியுங்கள். பின்னர் ஒரு நாள் என்னை சந்தியுங்கள்” என்று சொன்னார்.

பாஸ்டர் போனார்; அலமாரிகளில் உள்ள பல கோப்பு களை பார்த்தார் மனம் நெகிழ்ந்தார் கண்ணீர் சிந்தினார் வியந்தார். இவ்வளவு வேதனை சோதனை சாதனை புரிந்திருக்கிறார்களா? என்ற வியப்பு மேலிட்டவராய் மறுநாள் திருத்தந்தையை பார்த்து தன் வருத்தத்தை தெரிவிக்க போனார். திருத்தந்தையும் பார்த்தார் “போப்பாண்டவர் அவர்களே நான் பார்த்த அலமாரிகளில் உள்ளவர்களின் வாழ்க்கை வரலாற்றை பார்த்தேன். நீங்கள் அவர்களுக்கு புனிதர்பட்டம் கொடுத்தது நியாயமே” என்று கூறினார்.

போப்பாண்டவர் கூறினார் “நீங்கள் படித்த வலது புற பகுதியில் இருக்கும் அலமாரிகளில் இருக்கும் கோப்புக்கள் நாங்கள் புனிதர் பட்டத்துக்கு தகுதியில்லையென்று ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள். இடது புற அலமாரிகளில் உள்ளவர் களுக்கே நாங்கள் புனிதர் பட்டம் கொடுத்திருக்கிறோம்” என்று கூறினார். வந்த பாஸ்டர் போப்பண்டவரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு இடது புற அலமாரிகளை பார்க்காமலே சென்று விட்டாராம்.

சிலுவைகள் சுமக்காத எந்த புனிதர்களும் இல்லை. எந்தப் புனிதரும் சிலுவைகள் சுமக்காமல் இருந்ததும் இல்லை. சிலுவையைக் கண்டுபிடிப்பவன் ஆண்டவர் இயேசுவை எளிதாக கண்டு பிடித்துவிடுவான். ஆண்டவர் இயேசுவைக் கண்டுபிடித்தவன் சிலுவைகள் இல்லாமல் ஒரு நாளும் தூங்க மாட்டான். பாரம்பரியமாக நமது திருச்சபை யிலுள்ள பல புனிதர்கள் பொறுப்பில் பல பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதை நாமாக செய்வதில்லை அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்களுக்கு எந்தெந்த தனி வரம் ஈடுபாடு இருந்ததோ அதை வைத்துக்கொண்டு நமது திருச்சபை பல புனிதர்களை பாதுகாவலர்களாகப் போட்டிருக்கிறார்கள்.

நற்செய்தி அறிவிப்பு பணி ---- புனித பவுல்

கல்லூரிகளுக்கு ----- தாமஸ் அக்குவினாஸ்

காணாமல் போன பொருள்களுக்கு - வனத்து அந்தோனியார்

குருக்களுக்கு --- மரிய வியான்னி

பொது நிலையினருக்கு --- தாமஸ் மூர்

மறைபரப்பு பணி --- குழந்தை தெரேசா

நெருப்புக்கு - கத்தேரின் (சீயன்னா)

புனிதர்கள் நமக்காக பரிந்து பேசுபவர்கள். அதற்காக நாம் பாவம் செய்து கொண்டிருப்போம், அவர்கள் நமக்காக ஜெபிப்பார்கள் என்று எண்ணக் கூடாது. புனிதர்க்கெல்லாம் புனிதர் அன்னை மரியா. நம்மீது கருணை கொண்டு தன் மகன் வழியாக நமக்காக பரிந்து பேசுபவர். நாம் வாழும் காலத்தில் அன்னை தெரேசாவை பார்த்திருக்கிறோம். புனித தமியான் தொழு நோயாளிகளுக்காக பாடுபட்டவர். தொன் போஸ்கோ இளைஞர்களுக்காக உழைத்தவர் பட்டியல் நீளும்.

சகல புனிதர்களே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். ●

## இரக்கத்தைப் பெறுவோம்! இயற்கையைப் பேணி வளர்ப்போம்”

சென்ற இதழ் தொடர்ச்சி.

வெட்டிவயல் வளவன்..

**புனிதர்களின் வாழ்வில்...**

(பாலை, முல்லை) வன.அந்தோனியாரை “காட்டு அந்தோனியார்” என்று கூறுவதை கேட்டதில்லையா? வன.அந்தோனியாரைப் பின்பற்றிய, கோடி அற்புதர் பதுவாப் புனிதர் கடற்கரையில் மீன்களுக்கு மறைஉரையாற்றியது, மீன்கள் கேட்டதும் விந்தையில்லையா? புயலை அடக்க அந்தோணியார் பெயரால் சீட்டு எழுதி போட்ட செய்தி தெரியுமா.(நெய்தல்) யேசுவின் சீடர்கள் **நெய்தல்** நிலத்த வரே. அந்நாள் புனிதர்கள் தொட்டு, இந்நாள் இறையடியார் லூயி மரி லெவே, துப்புயி போன்ற எண்ணற்றவர் வேளாண்மை குடும்பத்தில் பிறந்தவர்களே. (மருதம்) பாத்திமாவில் காட்சி கொடுத்து இந்நாள் புனிதையர்களான லூசி தோஸ்சாந்தோஸ், பிரான்சிஸ், ஜெசிந்தா மார்த்தோ (7-10 வயது) ஆடு மேய்த்தவர்களே - (முல்லை). மண்ணுலகிலே செல்வம் சேர்த்து, மறைவாக வைத்தல் வேண்டாம். மண்ணில் இடும் பொருள் பூச்சி அழித்தல் செய்யும். விண்ணுலகில் செல்வம் சேர்த்து வையுங்கள். எளியோர் வாழ், மனமாற, செயலில் காட்டுங்கள் என்றார் இயேசு. தம் ஆலய மறை உரையில் கேட்ட இச்சொற்கள் தானே, தன் சகோதரியிடம் சொத்தை ஒப்படைத்துவிட்டு, காட்டு அந்தோனி யாராக்கியது மடாதிபதியை” (லூக்.12:33,34) (மத்.6:19,21).

***தமிழ் முனிவர் காட்டும் பூமி:*** “வான் இருக்க, மண் இருக்க உதவி நின்தாள் இருக்க, யான் இருக்க அங்கு இடம் ஒன்றிலையோ? (16-அடைக்கல மாதா மாலை) “பூவுலகும் ஏற்றி, தூயர்க்கு இவளை எஞ்சா, அடைக்கலம் ஆற்றி வழுவது அறிதுவப்ப” (1-அடை.மா.மா) பூமியில் உள்ளார் துயர் நீக்க, தணிக்க தாயுனை அடைக்கலமாய்க் கொண்டு உம் திருவடியில் இம் மாலையைச் சாற்றிக் கூறுவேன்.

“பார் பூத்த வினையற, நீ பயந்த நலத்திவ்வுலகு, சீர்பூத்த வானொப்ப செய்வதுஉன் சிறப்பாமோ?(திரு.கா.கல.4). மண்ணுலகில் படிந்துள்ள புழுதியாம் பாவத்தை துடைத்து விட்டாள் என்பதை “துகட்பழி உலகு படைத்தனை” என்று போற்றுகிறார். இரக்கம், அன்பு என்னும் கலப்பை பூட்டி, பாவிகளின் உள்ளத்தை உழுது, மறைநூலாம் விதை விதைத்து, ஆன்மாவைக் கெடுக்கும் கெட்டஆசையெனும் களை பிடுங்கி, தன் கருணையால் வேலிஇட்டு, நற்செயல்கள் என்னும் பூக்களைக் கண்டு, திருக்காவலூரில் ஆன்மப் பயிர் விளைச்சலைக் கண்டு (அறுவடை) மகிழ்கிறாள் என்பதை பாடல் “இடும்புகழே படப் பாடற்.... மாதோ (எண்.திரு.கா.கல 182) கூறுகிறது. தமிழில் நீதிநூல் அறநெறிச் சாரம் கூறும் “இன்சொல் விளைநிலம், ஈதல் வித்தாக... என்ற பாடலுடன் நேர்காணல் செய்யுங்கள்.

“அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல் தம்மை இகழ் வாரைப் பொறுத்தல் தலை” குறள் (151) நுட்பத்தை முனிவர் தம் காப்பியத்தில் “உவர்க்கும் தாழ்கடல்.... ஞாலம்... அவர்க் கும் தான், உணவு அளித்தலே இயற்றுதல் போலே” என்று கூறுகிறார். நிலத்தைக் கிழித்து உழவு செய்யும் உழவர்க்கு, உணவு அளிக்கும் தாய் போன்றவள் மரியாள் என்பதே பாடற் சுருக்கம். “ஒண்பகல் நெற்றி, போகிடல் உயர்ந்திடல், அகட் டில் வேய்ந்த சண்பக நிழலில் வைகி (தேம்பாவணி 30-61) திருக்குடும்பம் பயணிக்கிறபோது (ஆல) மர நிழலில் தங்கிய காட்சியின் வருணனையே இது. ஏலாக்குறிச்சியின் ஏந்தல் முனிவர், அடைக்கல மாதாமாலை; திரு.கா.கல; தேம்பா வணியில் காட்டும் நிலமகளாம் மண்ணின் பெருமை. அதனைக் காக்கும் பேரிரக்கம், அன்பும்-செய்நன்றி மறவாது பண் படுத்தி-விதைத்து- உரமிட்டு, களைபிடுங்கி, கதிரறுத்து, பயன்பாட்டை பெற்ற உழவர்களை ***மரியாளின் பண்புக்கு உவமை யாக்கும்*** அற்புதத்தைப் படித்துச் சுவையுங்களே! - தொடரும்.

# விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி



Né le: 7-1-1917

Décédé le: 18-8-1989

FORTUNE COJANDESSOU



Née le: 16-9-1915

Décédée le: 8-2-2009

FORTUNE MARIE THERESE

*உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - யோவான்.11:25*

**இறைவா, இவ்வுலகிலிருந்து அழைக்கப்பட்ட இவர்களின் ஆன்மாவை நித்திய வாழ்வில் சேர்த்து முடிவில்லா ஒளியில் என்றும் உம்மோடு இருக்கும்படி செய்தருளும் ஆமென்.**

புனித ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் 10-9-2017 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு நிறைவேற்றப்படும். அனைவரும் கலந்துகொண்டு ஜெபிக்க அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்*

மகன்: Raphael, மருமகள்: ழுந்தார்க்

பேரப்பிள்ளைகள்: **Annick, Diane, Paul**

புதுவை.

# 18-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள் பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான் - 11:25

இவரின் ஆன்ம இளைப் பாற்றிக்காக 15-9-2017 அன்று காலை 6 மணிக்கு திருப்பாதிரிப்புலியூர், புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப் படும். அன்னாரின் ஆன்மா, இறைவனில் நித்திய இளைப்பாற்றி அடைய மன்றாடுவோம்.

*1 கர்.1மங்.1திரி.*

**திரு. M. ஏகாம்பரம் அருள்நாதன், M.A.,B.Ed**

(தலைமை ஆசிரியர் ஓய்வு)

தோற்றம்: 4-5-1938

மறைவு: 15-9-2000

பிரிவால் துயருறும்

**மனைவி, மகள்கள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**

கடலூர் - 2.

## விண்ணக வாழ்வின் 8-ம் நாள் நினைவு அஞ்சலி



மலர்ந்தது:15-09-1926

உதிர்ந்தது:31-08-2017

**செல்வி பவுன் (எ) மரி தெரேஸ் சாந்தோ**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 7-9-2017 வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

அத்தையின் பிரிவால் துயருறும் அண்ணன் மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

**நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே, முடிவில்லா ஒளி இவர்கள்மேல் ஒளிர்வதாக.**



## விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி

"கடவுள் கொடுக்கும் அருள்கொடை நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் நிலைவாழ்வு" - உரோ.6:23

"நான் நல்லதொரு போராட் டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இனி எனக் கென்று வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே." - 2திமோ. 4:7,8.

நித்திய இளைப்பாற்றியை ஆண்டவரே! அவருக்கு அளித்தருளும். முடிவில்லாத ஒளி அவர்கள்மேல் ஒளிர்வதாக.

பிரிவால் துயருறும்
**மகன்கள்:** அருட்தந்தை **ம. தோமினிக் ரொசாரியோ**
**ம. ஜோசப் சந்தோஷ்குமார்**
மகள்: **ம. ப்ளோரா ஜெசிந்தா**
**மற்றும் உற்றார், உறவினர்.**

# கிறிஸ்தினாள் மரியநாதன்

| மண்ணேற்பு | விண்ணேற்பு |
|---|---|
| 24-07-1926 | 10-08-2017 |

**நினைவுத் திருப்பலி**
**09–09–2017 சனிக்கிழமைக் காலை 10.00 மணிக்கு.**
**இடம்: புனித சவேரியார் ஆலயம், மயிலாடுதுறை.**

### இறைவனில் இணைந்த

**22-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

மலர்ந்தது: 18-08-1921
உதிர்ந்தது: 23-09-1995



திரு. **C. அன்டோனி**
(Rtd. J.E. Electricity Dept. Pondy)

**11-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**



மலர்ந்தது: 02-11-1928
உதிர்ந்தது: 13-09-2006

திருமதி. **A.மரிதெரேஸ் சுசான்**

ஆல விருட்சமாம் எங்கள் குடும்பத்தின் ஆணிவேரான நீவிர் சாய்ந்திட்டீர் நிலையாக... மீளாத் துயரில் எமை ஆழ்த்தி நிரந்தரத் துயில் கொண்டீர். இறைவனின் பாதங்களில் உம் அழியாத நினைவுகள் நெஞ்சத்தில் நிழலாடிக்கொண்டு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்துகின்றது! உண்மைதான்.

எம் பெற்றோரை எங்களுக்கு கொடுத்ததற்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறோம். இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்போம்.

**என்றும் உங்கள் நினைவுகளோடு**
Fr. A.S.P. **ஒகிஸ்த்,** பங்குதந்தை புனித ஜெபமாலை அன்னை ஆலயம், முத்தியால்பேட்டை, புதுவை.
A. **ஜெசிந்தா,**
A. **எக்ஸ்படிட்,** *Superintendent, Pondy.*
**மற்றும் குடும்பத்தினர். புதுவை.**

23–9–2017 காலை 6.00 மணிக்கு முத்தியால்பேட்டை, புனித ஜெபமாலை அன்னை ஆலயத்திலும், மாலை 5.00 மணிக்கு ரெட்டியார்பாளையம், புனித அந்திரேயா ஆலயத்திலும் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலிகள் நிறைவேற்றப்படும்.

13–9–2017 காலை 6.00 மணிக்கு, ரெட்டியார்பாளையம், புனித அந்திரேயா ஆலயத்திலும் மற்றும் காலை 6.00 மணிக்கு முத்தியால்பேட்டை புனித ஜெபமாலை அன்னை ஆலயத்திலும், இவரது ஆன்மஇளைப்பாற்றிக்காகதிருப்பலிகள் நிறைவேற்றப்படும்.

✦ **கணனியில் புனித அன்னை தெரேசா பற்றிய நூல்:** அன்னை தெரேசா புனிதராக அறிவிக்கப்பட்டு ஓராண்டு நிறைவுறுவதையொட்டியும், அவர் இறையடி சேர்ந்து 20 ஆண்டுகள் நிறைவுறுவதையொட்டியும், அன்னை தெரேசா குறித்து, கணனி வழி வாசிக்க உதவும் நூல் ஒன்று வெளியிடப்பட உள்ளது. செப்டம்பர் மாதம் 4ம் தேதி, அன்னை தெரேசா, புனிதராக உயர்த்தப்பட்டதன் ஓராண்டு நிறைவும், செப்டம்பர் 5ம் தேதி அன்னை தெரேசா இறந்ததன் 20ம் ஆண்டு நிறைவும் நினைவுகூரப் படுவதையொட்டி, அன்புகூரப்படாதவர்களை நாம் அன்புகூர்வோம் என்ற தலைப்பில், கணனி வழி பயன்பாட்டிற்கான டிஜிட்டல் நூல் ஒன்று வெளியிடப்பட உள்ளது. அன்னை தெரேசாவின் புனிதர் பட்ட நிகழ்வுக்கு முன்னோடியாக, கடந்த ஆண்டு ஜூலை மாதம் 22ம் தேதி, இந்த நூல், திருத்தந்தையின் முன்னுரையுடன் வெளியிடப்பட்டது என்பதும், தற்போது டிஜிட்டல் வடிவில் வெளியிடப்பட உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கன.

✦ **டுவிட்டரில்:** "மனத்தளர்ச்சியடைந்தோர் மற்றும் புரிந்துகொள்தலும், கனிவும் தேவைப்படுவோர் ஆகியோருக்கு அன்னை தெரேசா போன்று, மகிழ்வு மற்றும் நம்பிக்கையின் வாய்ப்புக்களைத் திறந்துவிடுவோமாக"

✦ **ஐ.நா: கொத்துவெடிகள் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட நாடுகளுக்கு அழைப்பு:** கொத்து வெடிகுண்டுகளின் பயன்பாட்டைத் தடை செய்வதில் ஏற்பட்டுவரும் முன்னேற்றங்கள் குறித்து மகிழ்ச்சியை வெளியிடும் அதேவேளை, இன்னும் இதனால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவது குறித்து திருப்பீடத்தின் கவலையை ஐ.நா. அவையில் தெரிவித்தார், பேராயர் இவான் யுர்கோவிச். ஜெனீவாவிலுள்ள ஐ.நா. அலுவலகங்களுக்கு திருப்பீடப் பிரதிநிதியாகச் செயலாற்றும் பேராயர் யுர்கோவிச் அவர்கள், கொத்துவெடிகள் தடை ஒப்பந்தம் குறித்த கூட்டத்தில் உரையாற்றியபோது, இந்த ஒப்பந்தம் செயல்படுத்தப்பட்டு ஏழு ஆண்டுகள் நிறைவுறுவதைக் கொண்டாடும் அதே வேளை, சில மோதல்களில் இது தொடர்ந்து பயன்பாட்டில் உள்ளதும், அதனால் மக்கள் பெருமளவில் பாதிக்கப்படுவதும் கவலை தருவதாக உள்ளது என்றார். இந்த தாக்குதல்களால் பாதிக்கப்படும் மக்களின் மாண்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல, இந்தத் தடை ஒப்பந்தத்தின் விதிகள், மனிதாபிமான கண்ணோட்டத்துடன் நோக்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட வலியுறுத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார் பேராயர் யுர்கோவிச்.- வத்.வானொலி.

✦ **பாகிஸ்தான்:பாகிஸ்தான் தலத்திருஅவை - திருநற்கருணை ஆண்டு** கிறிஸ்தவர்களின் வாழ்விலும், குடும்பங்களிலும், இல்லங்களிலும் திருநற்கருணை மையமாக அமைவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் நோக்கத்தில், 2018ம் ஆண்டை, திருநற்கருணை ஆண்டு என அறிவிப்பதற்குத் தீர்மானித்துள்ளது, பாகிஸ்தான் தலத்திருஅவை. பாகிஸ்தான் ஆயர் பேரவையின் திருவழிபாட்டு ஆணைக் குழுவின் தலைவரான முல்டான் ஆயர் Benny Travas அவர்கள், இத்தகவலை, பீதேஸ் செய்தி நிறுவனத்திடம் அறிவித்தார். பிலிப்பீன்ஸ் நாட்டின் செபு நகரில் நடைபெற்ற உலக திருநற்கருணை மாநாட்டில் கலந்துகொண்ட பாகிஸ்தான் பிரதிநிதிகள் குழுவுக்கு கிடைத்த உள்தூண்டுதலின் பயனாக, பாகிஸ்தானில், 2018ம் ஆண்டை திருநற்கருணை ஆண்டு என அறிவிக்கத் தீர்மானிக்கப்பட்டது எனவும், ஆயர் அவர்கள் தெரிவித்தார். “நானே வாழ்வு தரும் உணவு” என்ற தலைப்பில் சிறப்பிக்கப்படும் திருநற்கருணை ஆண்டின் தொடக்க விழா, வருகிற நவம்பர் 24 ம் தேதி முதல் 26ம் தேதி வரை, கராச்சி புனித பேட்ரிக் பேராலயத்தில் நடைபெறும். இவ்வாண்டின் நிறைவு நிகழ்வு, 2018ம் ஆண்டு நவம்பர் 21ம் தேதி முதல் 24ம் தேதி வரை இலாகூரில் நடைபெறும். குடும்பங்கள், பள்ளிகள், இளையோர், சிறார் என எல்லாருக்கும் மறைக்கல்வி, ஒவ்வொரு பங்கிலும் திருநற்கருணை ஆராதனை, உட்பட பல திட்டங்களை திருநற்கருணை ஆண்டில் செயல்படுத்தப்படும் எனக் கூறினார், ஆயர் Travas. - Fies.

✦ **ஜெர்மனி: குடிமக்களின் பங்கேற்பே சனநாயகத்தைக் காக்கும்:** நாட்டின் அரசியல் பாதையில் ஒரு செயலூக்கமுடைய வழியைத் தேர்வு செய்யுமாறு, ஜெர்மன் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர், அந்நாட்டின் கத்தோலிக்க மற்றும் இவாஞ்சலிக்கல் கிறிஸ்தவ சபைத் தலைவர்கள். இம்மாதம் 24ம் தேதி ஜெர்மன் பாராளுமன்றத் தேர்தல் இடம் பெறவுள்ளதையொட்டி, மக்களின் வாக்களிக்கும் கடமை பற்றி தங்கள் கூட்டறிக்கையில் அழைப்பு விடுத்துள்ள இவாஞ்சலிக்கல் கிறிஸ்தவ அவையின் தலைவர், ஆயர் Heinrich Bedford-Strohm, கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர், கர்தினால் Reinhard Marx ஆகியோர், குடிமக்களின் பங்கேற்புடனேயே சனநாயகம் வாழமுடியும் என்பதை அறிந்துள்ள ஜெர்மன் மக்கள், தங்கள் வாக்களிக்கும் உரிமையை நன்முறையில் பயன்படுத்த வேண்டும் என விண்ணப்பித்துள்ளனர். எவ்வளவுக்கு மக்கள் அதிக அளவில் தேர்தல் வாக்களிப்பில் பங்குபெறுகிறார்களோ, அந்த அளவுக்கு, தலைவர்களின் பொறுப்புணர்வும் அதிகரிக்கும் எனவும், தங்கள் அறிக்கையில் கூறியுள்ளனர், ஜெர்மன் கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள். - வத்திக்கான் வானொலி.

✦ **வானதூதராக வழியனுப்பி வைத்த அன்னை:** 1979 ம் ஆண்டு, அன்னை தெரேசா அவர்களுக்கு நொபெல் அமைதி விருது வழங்கப்பட்ட வேளையில், அவர் வழங்கிய ஏற்புரையில், தன் வாழ்வு அனுபவங்கள் சிலவற்றைப் பகிர்ந்துகொண்டார். அவற்றில் ஒன்று, இதோ: “வீதியில் கிடந்த ஒருவரை எங்கள் இல்லத்திற்குக் கொணர்ந்தபோது, அவர் சொன்னதை நான் ஒருநாளும் மறக்கப்போவதில்லை. அவரது உடல் முழுவதும், காயங்களால் நிறைந்து, புழுக்கள் மண்டிக்கிடந்தது. முகம் மட்டுமே புழுக்களின் தாக்குதலிலிருந்து தப்பித்திருந்தது. அந்நிலையில் இருந்த அவர், எங்கள் இல்லத்திற்கு வந்து சேர்ந்ததும், 'நான் இதுவரை வீதியில் ஒரு மிருகத்தைவிட கேவலமாகக் கிடந்தேன் இப்போது, ஒரு வானதூதரைப்போல இறக்கப் போகிறேன்' என்று சொன்னார். சில நாள்கள் சென்று, அவர் இறைவன் இல்லத்தில் வாழச் சென்றார். ஆம், மரணம் என்பது, இறைவனின் இல்லம் செல்வதுதானே!” மனிதர்கள் என்றுகூட மதிக்க இயலாதவாறு உருக்குலைந்திருந்தோரை, வானதூதர்களாக மாற்றி, வழியனுப்பி வைத்த அன்னை தெரேசா, 20 ஆண்டுகளுக்கு முன், 1997ம் ஆண்டு செப்டம்பர் 5ம் தேதி இறைவனின் இல்லம் சென்றார். கொல்கத்தா வீதிகளிலிருந்து கொண்டுவரப்பட்டு, அன்னையின் இல்லத்தில் சில நாள்கள் தங்கியபின், வானதூதர்களாக இறைவனின் இல்லம் சென்றிருந்த பலர், அன்னையை வரவேற்க அங்கு காத்திருந்தனர் என்று உறுதியாகக் கூறலாம். அன்னை தெரேசா அவர்கள் இறையடி சேர்ந்த செப்டம்பர் 5ம் தேதியை, அகில உலக பிறரன்பு நாள் என ஐ.நா.அவை அறிவித்துள்ளது. 2013ம் ஆண்டு முதல் இந்த உலக நாள் சிறப்பிக்கப்படுகிறது. - வத்.வானொலி.

✦ **அன்னை தெரேசா துணை பாதுகாவலர்:** இப்புதன் மாலை 5.30 மணிக்கு, கொல்கத்தா செபமாலை அன்னை பேராலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில், பேராயர் திகுவாத்ரோ அவர்கள், புனித அன்னை தெரேசாவை, கொல்கத்தா உயர் மறைமாவட்டத்தின் துணை பாதுகாவலராக அறிவிப்பார் எனக் கூறினார், பேராயர் டி.சூசா. இந்நிகழ்வு குறித்து, IANS செய்தி நிறுவனத்திடம் பேசிய பேராயர் டிசூசா அவர்கள், ஒவ்வொரு மறைமாவட்டத்திற்கும் ஒரு பாதுகாவலர் உள்ளார், இவ்வழியில், புனித பிரான்சிஸ் சவேரியார், கொல்கத்தா உயர்மறைமாவட்டத்தின் பாதுகாவலராகப் போற்றப்படுகிறார்,தற்போது, புனித அன்னை தெரேசா அவர்களை, துணை பாதுகாவலராக அறிவிக்கவுள்ளோம் என்று தெரிவித்தார். கொல்கத்தா போன்ற நகருக்கும், கொல்கத்தா உயர் மறைமாவட்டத்திற்கும் புனித அன்னை தெரேசா அவர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர், அவரின் பரிந்துரையை இறைஞ்சுவதற்கு விரும்புகின்றோம் என்று, மேலும் கூறினார் பேராயர் தாமஸ் டிசூசா. - வத்.வானொலி.

*Printed and Published* on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.